www.penakural.com

மலர்: 03 இதழ்: 06 ஏப்ரல் 2025 Vol.: 03 Issue: 06 April 2025 ₹ 20/-

பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

பிரதமருக்கு இலங்கை மித்ர விபூஷனா விருது வழங்கி கௌரவிப்பு!



ஐன்ஸ்டீன் சொன்ன

$$E=mc^2$$

சமன்பாடு, விளக்கம் - ஆதாரம்!

சென்னை பெருங்குடியில் அம்பேத்கர் சிலைக்கு
அன்புமணி ராமதாஸ் மாலை அணிவித்து மரியாதை

டாக்டர் அம்பேத்கர் 135வது பிறந்தநாள் 14-04-2025 அன்று சென்னை பெருங்குடியில் அவர்களுடைய திருஉருவ சிலைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்கள்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். - ந. மதிவாணன்

பேனா குரல்

PENA KURAL தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 06 ஏப்ரல் 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு
வெளியிடுபவர் : **நா வீ சிவசங்கர்**
ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,
கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**
இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், S.மோகன்

தலைமை நிருபர்கள்:
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், L.குமரேசன், H.காஞ்சன், சங்கரன்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், S.ஜெயராஜ், ஜெபசீலன், K.மாரிதுரை, A.சரவணன்,

புகைப்பட நிருபர்கள்: **V.கவியரசன், கபில்**

ஓவியம் & புகைப்பட நிருபர்: **V.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz & Graphics - 8754582123

நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com

பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *

பெற்றோர்களின் அலட்சியமா?

சிறுவர்கள் வாகனம் ஓட்டுவதை தடுப்பதற்கான மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து காங்கிரஸ் எம்.பி. நீரஜ் டாங்கி, கேள்வி எழுப்பியபோது தமிழ்நாடு, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, 18 வயதுக்குட்பட்ட சிறார்கள் வாகனம் ஓட்டியதால் ஏற்படும் விபத்துகளில் முதலிடத்தில் உள்ளது என புள்ளிவிவரங்களை வெளியிட்டார்.

2023-24ல் நாடு முழுவதும் சிறார்கள் வாகனம் ஓட்டியதால் 11,890 விபத்துகள் நடந்துள்ளன. இதில் தமிழ்நாடு 2,063 விபத்துகளுடன் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிரம் - 1,067, உத்தரபிரதேசம் - 935, ஆந்திரபிரதேசம் - 766, கர்நாடகம் - 751, குஜராத் - 727, கேரளம் - 645, சத்தீஸ்கர் - 504, ராஜஸ்தான் - 450 ஆகிய மாநிலங்கள் அடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

சமீபத்திய சம்பவங்கள்:

சென்னை வடபழனியில், 14 வயது சிறுவன் ஓட்டிய காரில் 70 வயது முதியவர் உயிரிழந்தார். சிறுவன், அவரது தந்தை உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர். சென்னை பேசின் பாலத்தில், 18 வயது இளைஞன் அதிவேகமாக கார் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டு, 5 பேர் காயமடைந்தனர். கோயம்புத்தூரில், 17 வயது சிறுவன் இருசக்கர வாகனத்தில் விபத்துக்குள்ளாகி பேருந்தால் மிதிபட்டு உயிரிழந்தார். 2025ல் கோயம்புத்தூரில் மட்டும் சிறுவர்கள் ஏற்படுத்திய 10 விபத்துகளில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். புது தில்லியில், 15 வயது சிறுவன் லக்சரி கார் ஓட்டியதால் 2 வயது குழந்தை உயிரிழந்தது. புனேயில், 17 வயது இளைஞன் போர்ஷ் காரை மது அருந்தியபின் வேகமாக ஓட்டியதால் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

சட்டம் மற்றும் அத்துமீறல்:

18 வயதுக்குட்பட்டவர்கள் வாகனம் ஓட்டுவது சட்டவிரோதமானது. மோட்டார் வாகனச் சட்டப்படி, விபத்து ஏற்படுத்தினால் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் ₹25,000 அபராதம் விதிக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட சிறுவன் 25 வயது வரை ஓட்டுநர் உரிமம் பெற முடியாது.

ஆனால், பெரும்பாலானோர் இந்த விதிகளை அலட்சியம் செய்கின்றனர். பாதுகாப்பு உணர்வு இல்லாமல், ஹெல்மெட் அணியாமல், பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாமல் வாகனம் ஓட்டுவது அதிகரித்துள்ளது. மேலும், ப்ளூடூத் ஹெட்ஃபோன்களுடன் பேசியவாறோ பாடல் கேட்டவாறோ வாகனம் ஓட்டுவதால் கவனச்சிதறல் ஏற்பட்டு விபத்துகள் நிகழ்கின்றன.

தடுப்பு முயற்சிகள்:

- போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணிக்க CCTV மற்றும் AI தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.
- தானியங்கி அபராத முறை உள்ளது. ஆனால், தொலைபேசி எண் மாற்றம், முகவரி மாற்றம் போன்றவற்றால் அபராதம் வசூலிப்பது சிரமமாக உள்ளது.
- நகர்ப்புறங்களில் மட்டுமே இந்த முயற்சிகள் தீவிரமாக உள்ளன. ஊரகப் பகுதிகளில் போலீஸ் பற்றாக்குறை, கண்காணிப்பு கேமரா செலவு போன்றவை சவால்களாக உள்ளன.

பெற்றோர் பொறுப்பு:

சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் வாகனம் ஓட்டுவதை பெருமையாக கருதுகின்றனர். வேகமான பைக்குகள் மற்றும் கார்களை வாங்கித் தருவதும் உண்டு. இது சிறுவர்களின் அதிரடி ஓட்டுதலுக்கு வழிவகுக்கிறது.

தீர்வு:

போக்குவரத்து விதிகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதுடன், பெற்றோர்களை பொறுப்பாக்குவதே இந்த பிரச்சினைக்கு முக்கிய தீர்வாக இருக்கும்.

– ஆசிரியர்

பிரதமருக்கு இலங்கை மித்ர விபூஷனா விருது வழங்கி கௌரவிப்பு!

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இலங்கை அதிபர் திசநாயக்க 'இலங்கை மித்ர விபூஷனா' என்ற விருதை வழங்கினார்.

இலங்கை அதிபருடன் இணைந்து, கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பின்போது பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்த கருத்துகள்.

இலங்கை அதிபர் திசாநாயகா அவர்களே,
இரு நாடுகளின் பிரதிநிதிகளே,
ஊடக நண்பர்களே,
வணக்கம்!

இந்த கௌரவத்திற்காக இலங்கை அதிபர், இலங்கை அரசு, இலங்கை மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர்களே,

பிரதமர் என்ற முறையில் இலங்கைக்கு நான் மேற்கொள்ளும் நான்காவது பயணம் இதுவாகும். 2019-ம் ஆண்டில் எனது முந்தைய வருகை மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. அந்த நேரத்தில் இலங்கை எழுச்சி பெற்று வலுவாக உயரும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

அதிபர் திசநாயகாவால் 'ஸ்ரீலங்கா மித்ர விபூஷண' விருது வழங்கப்பட்டிருப்பது எனக்கு மிகவும் பெருமை அளிப்பதாகும். இந்த விருது என்னை மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களையும் கவுரவப்படுத்துகிறது. இது இந்திய - இலங்கை மக்களுக்கு இடையேயான வரலாற்று உறவுகள், ஆழமான நட்புறவுக்கு செலுத்தும் மரியாதையாகும்.

இலங்கை மக்களின் தைரியத்தையும் பொறுமையையும் நான் பாராட்டுகிறேன். இன்று, இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். உண்மையான நட்பு அண்டை நாடு என்ற முறையில் தனது கடமைகளை நிறைவேற்றியதில் இந்தியா பெருமிதம் கொள்கிறது. 2019-ம் ஆண்டு பயங்கரவாத தாக்குதலாக இருந்தாலும், கொவிட் தொற்றுநோயாக இருந்தாலும் அல்லது

சமீபத்திய பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும், ஒவ்வொரு சிரமத்தின் போதும் இலங்கை மக்களுடன் நாங்கள் உறுதியாக நின்றோம்.

தமிழின் மாபெரும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. அவர் சொன்னார்:

“செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு” என்று...

அதாவது, சவால்கள், எதிரிகளை எதிர்கொள்வது ஆகியவற்றில், ஒரு உண்மையான நண்பரது நட்பின் கேடயத்தை விட வலுவான உத்தரவாதம் எதுவும் இல்லை.

நண்பர்களே,

திசநாயகா அதிபராக பதவியேற்ற பின்னர் தமது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார். இது நமது சிறப்பு உறவுகளின் ஆழத்தின் அடையாளமாகும்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கை, தொலைநோக்கு ‘மகாசாகர்’ ஆகிய இரண்டிலும் இலங்கைக்கு சிறப்பான இடம் உண்டு. அதிபர் திசநாயகா அவர்கள் இந்தியாவுக்கு பயணம் செய்ததன் பின்னர் கடந்த நான்கு மாதங்களில் நமது ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையம் இலங்கையின் எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்ய உதவும். திருகோணமலையை எரிசக்தி மையமாக வளர்ச்சி அடையச் செய்வதற்கும் குழாய் இணைப்பை நிர்மாணிப்பதற்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான மின் கட்டமைப்புக்கிடையிலான இணைப்பு உடன்படிக்கையானது இலங்கைக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

இலங்கையில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் 5,000 சூரிய மேற்கூரை அமைப்பு தொடங்கி வைக்கப்படுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாள திட்டத்திற்கும் இந்தியா ஆதரவை வழங்கும்.

நண்பர்களே,

‘அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்‘ என்ற தொலைநோக்குப் பார்வையை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. நட்பு நாடுகளின் முன்னுரிமைகளையும் நாங்கள் மதிக்கிறோம்.

கடந்த 6 மாதங்களில் மட்டும், 100 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான கடன்களை நாங்கள் மானியங்களாக மாற்றியுள்ளோம். எமது இருதரப்பு ‘கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்‘ இலங்கை மக்களுக்கு உடனடி உதவிகளையும் நிவாரணங்களையும் வழங்கும். இன்று வட்டி விகிதங்களையும் குறைக்க முடிவு செய்துள்ளோம். இன்றும் கூட இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கிறது என்பதை இது குறிக்கிறது.

கிழக்கு மாகாணங்களின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்காக சுமார் 2.4 பில்லியன் இலங்கை ரூபாய் ஆதரவுத் தொகுப்பு வழங்கப்படும். விவசாயிகளின் நலனுக்காக இலங்கையின் மிகப்பெரிய கிடங்கை திறந்து வைத்தோம்.

நாளை ‘மஹோ-ஓமந்தாய்’ ரயில் பாதையை தொடங்கி வைப்பதுடன், ‘மஹோ - அனுராதபுரம்‘ பிரிவில் சமிக்ஞை முறைக்கு அடிக்கல் நாட்டவுள்ளோம். காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனப்படுத்தும் பணி விரைவில் தொடங்கப்படும்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தினருக்காக 10,000 வீடுகளின் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும். 700 இலங்கை நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையுடன் தொடர்புடைய நபர்கள், தொழில் முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள், இளம் தலைவர்கள் அடங்குவர்.

நண்பர்களே,

நாங்கள் பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களைக் கொண்டுள்ளோம் என்று நம்புகிறோம். இரு நாடுகளின் பாதுகாப்பு ஒன்றோடொன்று தொடர்புடையது, ஒன்றைச் சார்ந்தது.

இந்தியாவின் நலன்கள் குறித்த அவரது உணர்திறனுக்காக அதிபர் திசநாயகாவுக்கு நான் நன்றி கூறுகிறேன். பாதுகாப்பு ஒத்துழைப்புத் துறையில் செய்யப்பட்ட முக்கிய ஒப்பந்தங்களை நாங்கள் வரவேற்கிறோம். கொழும்பு பாதுகாப்பு மாநாடு, இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றில் இணைந்து பணியாற்றவும் நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம்.

நண்பர்களே,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பல நூற்றாண்டுகள் பழமையான ஆன்மீக உறவுகள் உள்ளன.

எனது சொந்த மாநிலமான குஜராத்தின் ஆரவல்லி பகுதியில் 1960-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் கண்காட்சிக்காக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய புனரமைப்பு பணிகளுக்கு இந்தியா உதவி செய்யும். அனுராதபுரம் மகாபோதி ஆலய வளாகத்தில் புனித நகரம், நுவரெலியாவில் உள்ள சீதா எலியா விகாரை நிர்மாணிப்பதற்கும் இந்தியா ஆதரவளிக்கும்.

நண்பர்களே,

மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தோம். இதில் மனிதாபிமான அணுகுமுறையுடன் செயல்பட வேண்டும் என்பதை நாம் கூறினேன். மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

இலங்கையில் புனரமைப்பு, நல்லிணக்கம் குறித்தும் பேசினோம். அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை குறித்து அதிபர் திசநாயகா என்னைப் பாராட்டினார். இலங்கை அரசு, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் அதன் வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

நண்பர்களே,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டவை. எமது மக்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நாம் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம்.

அதிபர் திசநாயகா வழங்கிய அன்பான வரவேற்புக்காக மீண்டும் ஒரு முறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் காலங்களில் நமது ஒத்துழைப்பைப் புதிய உயரத்திற்கு எடுத்துச் செல்வோம் என்று நான் நம்புகிறேன்.

மிக்க நன்றி!

- ராதிகா. S

ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ஏவுதளம்

ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ஏவுதளம் நிறுவப்படும். இந்த திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது ரூ.3984.86 கோடி செலவில் அமைக்கப்படும். இந்தத் தளத்தை நிறுவும் பணி 4 ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரோவின் அடுத்த தலைமுறை ஏவுகணை வாகனம் உருவாக்கும் பணி தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறது. இது 90 மீட்டர் உயரமும், அதிகபட்சமாக 1000 டன் எடையும் கொண்டது. ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருக்கும் ஏவுதளங்கள் இந்த வகை வாகனங்களை விண்ணில் செலுத்த முடியாது.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வான்பகுதியில் 19 தகவல் தொடர்பு செயற்கை கோள்கள் செயல்படுகின்றன. இவை தொலைதொடர்பு, அகண்ட அலைவரிசை, ஒலிபரப்பு சேவைகள் ஆகியவற்றுக்கும் சமூக மற்றும் உத்திசார்ந்த தொடர்புகளுக்கும் உதவியாக இருக்கின்றன. விண்வெளி துறை சீர்திருத்தங்கள் காரணமாக அரசு சாராத நிறுவனங்களும், செயற்கை கோள் அடிப்படை-யிலான சேவைகளை வழங்குவதற்கு செயற்கை கோள்களை கட்டமைப்பது, குத்தகைக்கு அளிப்பது, சொந்தமாக கொண்டிருப்பது, செயல்படுத்துவது ஆகியவற்றில் பெருமளவு பங்கு வகிக்கின்றன. இத்தகைய பணிகளில் ஆர்வம் காட்டும் 10-க்கும் அதிகமான செயற்கை கோள் இயக்குவோர்கள் அங்கீகாரத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளனர். சந்தையில் அதிக எண்ணிக்கையில் இத்தகைய நிறுவனங்கள் இருப்பதால் விரிவான செயற்கை கோள் திறனை பெறுவதோடு, குறைந்த செலவில் ஆதாயம் பெறவும், வழி ஏற்படுகிறது.

அகண்ட அலைவரிசை சேவைகளை வழங்குவதற்கான விண்வெளி சொத்துகளை நிறுவுவதற்கு இந்திய நிறுவனங்களை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. இந்தியரால் இயக்கப்படும் ஸ்டார்லிங் போன்ற என்ஜிஎஸ்ஓ செயற்கை கோள் நிலையத்தை அமைப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் இன்-ஸ்பேஸ் அமைப்பு விண்ணப்பம் எதையும் பெறவில்லை.

வெளிநாட்டைச் சேர்ந்த அனைத்து செயற்கை கோள்களும், இன்-ஸ்பேஸ் அங்கீகாரம் பெற்ற பிறகே அகண்டஅலைவரிசை செயற்கை கோள் வலைபின்னல்கள் சேவை வழங்க முடியும். சேவைகளுக்கான இத்தகைய செயற்கை கோள்களின் பயன்பாடு இந்திய விண்வெளி கொள்கை, தொலைத் தகவல் தொடர்பு சட்டம் மற்றும் இதர ஒழுங்குமுறை விதிகள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

மத்திய விண்வெளி மற்றும் அணுசக்தித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் இந்த தகவலை தெரி-வித்துள்ளார்.

- D. **ராஜேஷ்**

விருத்தாசலம் ஆரம் அப்பாவு தொண்டு நிறுவனம் சார்பில் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள்

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அடுத்து உள்ள வீரநத்தம் கிராமத்தில் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பெய்த கன மழை, மற்றும் பனிக் காலத்தில் பொதுமக்கள் அவதி அடைந்து வந்தனர். இதனை அறிந்த விருத்தா சலம் அடுத்துள்ள விளங்காட்டூர் ஆரம் அப்பாவு தொண்டு நிறுவனம் மற்றும் கிருஸ்தவ தமிழ் ஆலயம் சார்பாக நிறுவன தலைவர் சுகந்தி அப்பாவு தலைமையில், கிராமத்தில் உள்ள 500 குடும்பத்தினர்களுக்கு நிவாரணப் பொருட்கள் பொருட்கள் வழங்கினார். இதில் நிர்வாக இயக்குநர் கோமதி, ராமு ராஜேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிவாரண பொருட்களில் பாய், போர்வை. மளிகை பொருட்கள், காய்கறிகள் குழந்தைகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் உள்பட 20க்கும் மேற்பட்ட வகையான பொருட்கள் இருந்தன. அதனை பெற்று கொண்ட கிராம பொதுமக்கள் அனைவ ரும் நன்றி தெரிவித்தனர்.

உடன் தொண்டு நிறு வன உறுப்பினர்கள் கீர்த்திகா, சார்லஸ், ஜான்சி ராணி, பரமேஸ்வரி, கபில், வீரநத்தம் பிராபாகரன் ஸ்டாலின் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் இருந்தனர்.

- கபில்

பாம்பன் புதிய பாலம்: பிரதமர் திறந்து வைத்தார்!

ஆன்மிக தலமாக விளங்கும் ராமேஸ்வரத்திற்கு முக்கிய வழித்தடமாக இருப்பது ரயில் பாலமாகும். இந்த பாலத்தின் மூலமாக மட்டுமே ராமேஸ்வரத்திற்கு மக்கள் செல்ல முடியும். அந்த வகையில் 100 ஆண்டுகள் பழமையான இந்த பாலம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக பழுதடைந்தது. இதனையடுத்து புதிய பாலம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டது. இதன் படி கடந்த 2020ம் ஆண்டு முதல் புதிய பாலத்தின் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டன. கொரோனா பாதிப்பு, கடல் காற்று மற்றும் சவாலான வானிலைக்கு மத்தியில் பாம்பன் புதிய பாலத்தின் கட்டுமான பணிகள் கடந்த ஆண்டு இறுதியில் முடிவடைந்தன.

550 கோடியில் பாம்பன் பாலம்

பாம்பனில் கடல் நடுவே ரூ.550 கோடி செலவில் புதிய ரயில்வே பாலம் கட்டப்பட்டுள்ளது. பாம்பன் புதிய பாலத்தில் 72.5 மீட்டர் நீளமுள்ள மையப் பகுதி உள்ளது. இதன் மூலம் கப்பல்கள் வந்த செல்வதற்காக ஏற்கனவே மனிதர்களால் மேலே உயர்த்தப்பட்ட பாலத்திற்கு பதிலாக இயந்திரம் மூலாமக 17 மீட்டர் உயரத்திற்கு பாலத்தை உயர்த்தும் வகையில் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாம்பன் ரயில் பாலம் திறப்பு விழாவில் கலந்து கொள்ள பிரதமர் மோடி இலங்கையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் மண்டபம் வந்தடைந்தார். அப்போது அவருக்கு தமிழக ஆளுநர் ரவி, மத்திய அமைச்சர் எல். முருகன், தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, சரத்குமார். ஜி.கே.வாசன் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர். இதனையடுத்து சிறிது நேர ஓய்வுக்கு பிறகு பட்டு வேட்டி சட்டையோடு விழா நடைபெறும் பாம்பன் பாலம் வந்தடைந்தார். அவருக்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் வரவேற்றனர்.

பாம்பன் பாலத்தை கடந்த கடற்படை கப்பல்

இதனையடுத்து பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்தை கொடியசைத்து பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தில் உள்ள மையப்பகுதி மேலே தூக்குவதையும் பார்வையிட்டார். அப்போது பாலத்திற்கு கீழே கடலோர காவல்படையின் கப்பல்கள் கடந்து சென்றது. இதனை கையசைத்து ரசித்த பிரதமர் மோடி இந்த நிகழ்ச்சிக்கு பிறகு ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதசுவாமி கோயிலுக்கு பிரதமர் மோடி சென்று தரிசனம் மேற்கொண்டார்.

- B. நவீன்குமார்

உலகின் உச்சம் அவள், ஆகாயத்தின் வெள்ளை மச்சம் அவள், இரவின் காதலி அவள், ஈர காற்றின் பேரொளி அவள், உலா வரும் ரதி அவள், ஊரையே மயக்கும் மதி அவள், எட்டாத கனி அவள், ஓசை எழுப்பாத மொழி அவள், இரவு என்னும் தனிமையின் வழி அவள்

நிலவு எதற்காக? கவிஞர்கள் பாடல்களில் உபயோகப்படுத்திக் கொள்ளவா? இரவில் வழிக்காட்டவா? அல்லது சோசியர்கள் நம் எல்லோருடைய எதிர்காலத்தையும் கணித்து, உலகிற்கு பேருதவி செய்யவா? இல்லை ராகு கேது என்ற பாம்புகள் பசியாறவா?

வருங்காலத்தில் மத்தநாடுக்காரன் நிலவை வைத்து பல பிசினஸ் பிளான் போட்டுவைத்திருந்தாலும், நம்ப ஆட்கள் ரொம்பகாலத்துக்கு முன்னமே நிலாவைக் காண்பித்து காசு பண்ண ஆரம்பித்து விட்டார்கள்! ஆனா மொளகா அரைத்தது என்னமோ நம்ம ஆளுங்க தலைமேலத்தான். சரிப்போகட்டும் . உண்மையாகவே இந்த நிலவு முக்கியம் வாய்ந்ததா? நம்மூர் டுபாக்கூர் விஷயங்களை தள்ளுபடி செய்துவிட்டு, விஞ்ஞானப்பூர்வமாக நிலவை அணுகலாமா? அதற்கு நம்ம பழைய 'நிலவு... பூமியின் தோழி ' என்றப்பதிவு உள்ளது.

சில நிலாத்துளிகள்....

வயசு: 4.5 பில்லியன் வருஷம்.

எடை: 73,490,000,000,000,000 மில்லியன் கிலோ.

வடிவம்: லைட்டா கோழி முட்டை வடிவம்!

நம்ம பூமியில் இருந்து 3,84,467 கி.மீ தூரத்தில் உள்ளது. கார்ல போனா 130 நாளு, ராக்கெட்ல போனா 13 அவரு(hrs.), Light கணக்கா போனா 1.52 நொடி!

சுற்றளவு: 3476 கி.மீ கார்ல சுத்தி வந்தா 4 நாள் ஆகும்.

பூமியும் நிலாவும் ஒரே ரேஞ்சில் சுத்துவதால், நாம நிலாவின் ஒரே சைடத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்!

பூமி சின்ன வயசா இருந்தப்போது, நிலா 3 மடங்கு பெரிசா தெரிந்ததாம். ஏன்னா அப்போ கொஞ்சம் கிட்ட இருந்தது. அனா இப்போ ' நிலவுக்கு என் மேல் என்னடிக் கோபம்? என்பதுப்போல் கொஞ்ச கொஞ்சமாக விலகி செல்லுகிறது!

நிலாவில் எந்த மண்டலமும் கிடையாது. எந்த 'gas' ஆக இருந்தாலும், அது 'பூட்ட கேஸ்தான்!' ஏன்னா அதன் ஈர்ப்பு சக்தி ரொம்ப வீக்கு!

அங்க காத்து, கருப்பு, தண்ணி எதுவும் இல்லாததனால், 3 பில்லியன் வருஷத்துக்கு முந்தி எப்படி இருந்ததோ, ஒரு மண்ணும் மாறாமல் அப்படியே இருக்கிறது. நம்ம ஆள் போய்த்தான் கொஞ்சம் கலைத்து விட்டு வந்துள்ளான். மறுபடியும்

போய்க் கலைக்கவில்லை என்றால், 1969 இல் அவன் விட்டு சென்ற 'காலடி', குறைந்தப்பட்சம் இன்னும் 11 மிலியன் வருடங்கள் வரை அப்படியே இருக்கும்.

பசிபிக் பெருங்கடலின் ஏரியாவும், நிலாவின் பரப்பளவும் ஏறக்குறைய சேம்!

அமெரிக்கா பல இடங்களில் தன் கொடியை நாட்டி இருந்தாலும், நிலவை எந்த நாடும் சொந்தம் கொண்டாட முடியாது. சூரியக் குடும்பத்தில் பல கிரகங்களுக்கு சொந்த நிலவு இருந்தாலும், நம்ம நிலவு 'Moon'. நிலவு இதுவரை 12 மனிதர்களால் மிதிப்பட்டுள்ளது.

வழக்கமாக வருடத்துக்கு 12 முழுநிலவுகள் வரும். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நாட்கள் சேர்ந்து விடுவதால் 13 முழுநிலவும் ஏற்படும். இது எப்பவாவது வருவதால் இதை 'Blue Moon' என்று அழைக்கிறார்கள்.

Dr. Eugene Shoemaker, பூகோள விஞ்ஞானி, நிலவுக்கு சென்ற விண்வெளி வீரர்களுக்கு, நிலவில் உள்ள பள்ளங்களை (Craters) பற்றி பாடம் எடுத்தவர். அவரின் நீண்ட நாள் கனவான விண்வெளிப் பயணத்தையும், நிலவில் நடைபயணம் செய்யும் ஆர்வத்தையும், தன் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இழந்தார். ஆனால் அவரின் கடைசி விருப்பமான அவரின் சாம்பல், அந்த நிலவின் பள்ளங்களில் தூவப்பட்டது!

இதுவரை நிலவிலிருந்து 382 கிலோ நிலவுப்பாரைகள் எடுதுவரப்பட்டுளன. உங்க எடை இங்கே 82 கிலோவா? அப்போ நிலவில் வெறும் 14 கிலோத்தான்!

நன்றி: பிரபஞ்சப்ரியன்

- R.ஹரிகிருஷ்ணன்

எவர் பிரைட் மழலையர் பள்ளி ஆண்டு விழா 2025

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டம் குத்தனூர் மாடம்பாக்கம் கிராமத்தில் எவர் பிரைட் மழலையர் பள்ளியின் 22ஆம் ஆண்டு விழா கடந்த 05-04-2025 அன்று மாடம்பாக்கத்தில் உள்ள VSR மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக மணிமங்கலம் காவல்துறை அதிகாரி திரு. ஜி.அசோகன், நடிகர் திரு. பிர்லா போஸ், செய்தி வாசிப்பாளர் திருமதி. சுஜாதா பாபு, பள்ளி தாளாளர் திரு. என். இளங்கோவன் மற்றும் சீனியர் அகாடமிக் அட்வைசர் மிஸ்டர் ஜாய் ஜோசப் டேவிட், மாடம்பாக்கம் திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற தலைவர் E.திருநாவுக்கரசு மற்றும் ஆசிரியர் பெருமக்கள் பெற்றோர்கள், பொதுமக்கள் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக காவல்துறை அதிகாரி, நடிகர், செய்தி வாசிப்பாளர், கல்வியாளர், பள்ளி தாளாளர் ஆகியோர் தேர்வு இப்பள்ளியின் பெருமையை உணர்த்துகிறது. மாணவர்கள் எதிர்காலத்தில் அவர்களுக்கு விருப்பமான துறையை தேர்வு செய்து வெற்றிபெற வேண்டும் என்று பேசினார்கள்.

ஆண்டு விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் திருக்குறள் நாடகம், யோகா, நடனம், இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில் தங்கள் பள்ளியில் நடைபெற்ற பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசு வழங்கினார்கள்.

இப்பள்ளியின் நோக்கம் கல்வி மட்டும் அல்லாமல், GENERAL KNOWLEDGE, ATTITUDE, SKILLS போன்றவற்றையும் சேர்த்து சிறப்பான ஆசிரியர்களை கொண்டு ஏட்டுக்கல்வி மட்டுமல்லாமல் இது போன்ற செயல்களிலும் சிறந்து விளங்க செய்வதும் மாணவர்களை உருவாக்குவது ஆகும். முடிவில் பள்ளியின் நிர்வாகி திரு. முருகேசன் அவர்களும் பள்ளியின் முதல்வர் திருமதி. லயன் எம்.கீதா முருகேசன் நன்றியுரை கூறினார்கள். விழா இனிதே சிறப்புடன் நிறைவுற்றது.

குறிப்பு: பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விவரங்களுக்கு பள்ளியை அணுகவும்.

- M.பாலசுப்ரமணியன்

சுண்ணாம்பு குட்டை அரசுப் பள்ளி மாணவர்கள் அசத்தல்

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற மாதம் 1000 ரூபாய் உதவித் தொகை பெறுவதற்கான தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு தேர்வில் மாவட்டம் முழுவதும் இருந்தும் 37 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

இத்தேர்வில் மல்லப்பள்ளி ஊராட்சி அடுத்த சுண்ணாம்பு குட்டை ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பரணிமுத்து, திவ்ய பிரகாஷ், புவியரசு மற்றும் மாணவி பரணி ஆகிய நால்வர் தேர்ச்சி பெற்றனர்.

மாணவர்களுக்கு பள்ளியின் (பொறுப்பு) தலைமை ஆசிரியர் சங்கர் பெற்றோரை நேரில் அழைத்து மாணவர்களை வாழ்த்தினார். பள்ளியில் தலைமையாசிரியர் இல்லாத போதும் ஒரே பள்ளியில் பயிலும் 4 மாணவர்கள் அரசின் உதவித்தொகை பெற தேர்வாகியுள்ளது பலரது பாராட்டுக்களை பெற்று வருகிறது.

சம்பந்தப்பட்ட மாதம் 1000 உதவித் தொகையானது பன்னிரண்டாம் வகுப்பு வரை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- S.மோகன்

முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன மென்பொருள் மாதிரி மத்திய மின்சார ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உற்பத்தி, பரிமாற்றம், சேமிப்பு விரிவாக்க திட்டமிடல் மாதிரி தேவைக்கான ஒரு முக்கிய கருவி, 11.04.2025 அன்று மத்திய மின்சார ஆணையத்தின் (CEA) தலைவர் திரு கன்ஷ்யாம் பிரசாத்தால், மாநில மின் பயன்பாடுகளின் பல்வேறு பிரதிநிதிகள் முன்னிலையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மென்பொருள் மாதிரியை அனைத்து மாநிலங்கள் / விநியோக நிறுவனங்களுக்கு இலவசமாக விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட இது, ஜூன் 2023-ல் மின்சார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்துவதில் மாநிலங்களுக்கு உதவ வடிவமைக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்ட பின்னர், மின்சார ஆணையம் அனைத்து மின் விநியோக நிறுவனங்களுக்குமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டம் மாறும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் திருத்தப்பட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், அனைவருக்கும் ஒரு பொதுவான செயல்பாட்டை உருவாக்கி, அதை இலவசமாக அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஆய்வுகளை எளிதாக ஒருங்கிணைக்கவும், நாட்டிற்கு உகந்த தீர்வுகளை வெளிக்கொணரவும் இது உதவும்.

- ஜெபசீலன்

கேப்டன் விஜயகாந்தின் சமூக சேவையை பிரதமர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்

Narendra Modi
@narendramodi · Follow

My dear friend Captain Vijayakanth was remarkable! He and I interacted so closely over the years and also worked together.

People across generations remember him for the good he did for society.

@PremallathaDmdk

Premallatha Vijayakant @PremallathaDmdk
Captain Vijayakanth was not just a towering figure in Tamil cinema and politics, but a man who earned the love and respect of many, including our Prime Minister. Narendra Modi ji always saw him as more than a political colleague. He would fondly call him the 'Lion of Tamil Nadu'

8:53 PM · Apr 14, 2025

கேப்டன் விஜயகாந்துடனான தனது நட்பு குறித்தும், சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய சேவைகள் குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து திருமதி பிரேமலதா விஜயகாந்தின் பதிவுக்கு சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிலளித்திருப்பதாவது:

"என் இனிய நண்பர் கேப்டன் விஜயகாந்த் அற்புதமானவர்!

நானும், அவரும் பல ஆண்டுகளாக நெருக்கமாக கலந்துரையாடியதுடன், இணைந்து பணியாற்றியும் இருக்கிறோம்.

சமூக நன்மைக்காக அவர் செய்த பணிகளுக்காக பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் அவரை நினைவு கூர்கிறார்கள்.

- K.கலைமணி

பொறுமை! விடாமுயற்சி! நம்பிக்கை!

இரண்டு மாம்பழங்களும் ஒரே மரத்தின் ஒரே கிளையில் தான் வளர்ந்துள்ளன. ஒன்று ஏற்கனவே பழுத்துவிட்டது, மற்றொன்று இன்னும் பழுக்கவில்லை. பழுக்க அதற்கு இன்னும் அதிக நேரம் தேவைப்படுகிறது.

இந்த மாம்பழங்கள் மூலம் இயற்கை நமக்கு ஒரு முக்கியமான பாடத்தை கற்பிக்கிறது. நமக்கு முன்னால் சிலர் வெற்றி பெற்றுவிடுவதால், நாம் தோல்வியடைந்தவர்கள் என்று அர்த்தமல்ல. நமது நேரம் இன்னும் வரவில்லை என்று அர்த்தம். எனவே, நாம் பொறுமையாக இருக்க வேண்டும், உற்சாகமாக இருக்க வேண்டும், விரக்திக்கு அடிபணியாமல் இருக்க வேண்டும். நம் சொந்த வெற்றியின் சந்தோஷத்தை அடைவதற்கு இன்னும் சிறிது காலம் தேவைப்படலாம் அவ்வளவு தான்.

நினைவில் கொள்ளுங்கள்!

நமக்கான நேரம் வரும் - அதற்கு தேவை பொறுமை, விடாமுயற்சி மற்றும் நம்பிக்கை!

- அன்புமணி

குட் பேட் அக்லி விமர்சனம்

அஜித் ஒட்டு மொத்த இந்தியாவும் நடுங்கும் கேங்ஸ்டராக இருக்க, அந்த வேலையால் அன் குடும்பத்திற்கு ஆப்பத்து வருகிறது. இதனால் பிறந்த குழந்தையை கூட பார்க்க அனுமதிக்க மறுக்கிறார் திரிஷா.

இதனால் அஜித் போலிஸிடம் சரண்டர் ஆகி, திருந்தி 17 வருடம் கழித்து தன் பழைய கேங்ஸ்டர் வாழ்கையை மறைத்து மகனை பார்க்க வருகிறார்.

அப்படி பார்க்க வந்த இடத்தில் அஜித் மகனை அர்ஜுன் தாஸ் போலிஸிடம் ஏதோ ஒரு காரணத்துகாக சிக்க வைக்கிறார். இதனால் குட் இருந்த அஜித் பேட் ஆக மாறுகிறார்.

அர்ஜுன் தாஸ் ஏன் தன் மகனை ஜெயிலுக்கு அனுப்பினார் காரணத்தை தெரிந்து தன் மகனை ஜெயிலில் இருந்து அஜித் மீட்டாரா என்ற சரவெடியே இந்த குட் பேட் அக்லி மீதிக்கதை.

அஜித் ஒன் மேன் ஷோ தான் இந்த குட் பேட் அக்லி. ஆதிக் ஒவ்வொரு ப்ரேமும் ரசித்து ரசித்து எடுத்துள்ளார், இந்த அஜித்தை தானயா கேட்கிறோம் என ரசிகர்கள் ஆர்பரிப்பு தான் அஜித்தின் பெர்ப்பாமன்ஸ் படம் முழுவதும்.

குட் அப்பாவாக எல்லோரையும் கலாய்த்து ஜாலியாக இருக்க மகனுக்காக பேட் ஆக மாற அவர் எடுக்கும் செய்யும் காட்சிகள் சரவெடி தான். அதிலும் இடைவேளை போது பேங் ஆ, மொட்டையா என்ற காட்சி மங்காத்தா பிறகு ஒரு அடி தூள் இண்டர்வெல்.

இரண்டாம் பாதி தொடங்கியதும் அஜித் யார் என்ற ப்ளாஷ்பேக் அதில் டான் லீ, ஜான் விக், ப்ரோபோஷன் ரெபரன்ஸ் என 10 தீபாவளி காட்டியுள்ளார் ஆதிக் ரவிச்சந்திரன்.

பிரசன்னா, சுனில் எல்லாம் அஜித்துடன் கூடவே வந்து, அவ்வபோது அஜித்தை பில்டப் செய்யவே மட்டும் தான் வருகிறார், படத்தில் பல சர்ப்ரைஸ், சிம்ரன் எண்ட்ரி, அதை கையண்ட விதம் என அந்த காட்சிகள் எல்லாம் ரசிகர்களுக்க் விருந்து தான்.

அர்ஜுன் தாஸ் இவர் எப்படி அஜித்திற்கு வில்லன் என கேட்டவர்களுக்கு நல்ல பதிலடி, 2கே கிட்ஸ் அஜித்தை வம்பு இழுத்தால் என்ற கதாபாத்திரத்தில் சிறப்பாகவே நடித்துள்ளார்கள்.

படம் முழுவதும் அஜித் ரெபரன்ஸ் என ரசிகர்கள் கத்திக்கொண்டே இருக்கட்டும் என நினைத்தார் போல ஆதிக், ஏதாவது வந்துக்கொண்டு இருக்கிறது.

அதே நேரத்தில் இந்த பழைய பாடல், சவுண்ட் எல்லாம் ஒரு கோட்டத்திற்கு மேல் போதும்ப்பா என்ற சலிப்பையும் தட்டுகிறது, ஆதிக் அதை கொஞ் சமாக பயன்படுத்துங்கள், லாஜிக் கொஞ்சம் கூட எதிர்ப்பார்க்க கூடாது போல.

படம் டெக்னிக்கலாக இசை ரசிகர்களுக்கு விருந்து என்றாலும், சத்தம் கொஞ்சம் ஓவர் டோஸ், ஒளிப்பதிவு நன்றாக உள்ளது, அதே நேரத்தில் ஒரு சில இடங்கள் ஏன் அத்தனை மங்கலாக உள்ளது என கேட்க வைக்கிறது.

- P.கார்த்திகேயன்

இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்

குவாண்டம் குறித்த இந்தியாவின் சர்வதேச தொழில்நுட்ப ஈடுபாட்டு உத்தியின் முதல் பதிப்பை வெளியிட்டது

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் 14-04-2025 அன்று குவாண்டத்திற்கான சர்வதேச தொழில்நுட்ப ஈடுபாட்டு உத்தியின் முதல் பதிப்பை வெளியிட்டது, இது குவாண்டம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் இந்தியா எதிர்கொள்ளும் உத்தியை வெளிப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியைக் குறிக்கிறது, இது கண்டுபிடிப்பை விரைவுபடுத்துதல், புதுமையை ஊக்குவித்தல், முக்கியமான துறைகளில் தத்தெடுப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14-ம் தேதி குவாண்டம் தினம் கொண்டாடப்படுகிறது. உலக குவாண்டம் தினம் 2025-ஐ முன்னிட்டு பிஎஸ்ஏ போட்காஸ்ட் அலுவலகத்தின் பிஎஸ்ஏ பேராசிரியர் அஜய் குமார் சூட் இந்த அறிக்கையை அதிகாரப்பூர்வமாக வெளி-யிட்டார். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உறுப்பு நாடுகளால் சர்வதேச குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டு என்று 2025-ம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த அறிக்கை சிறப்பு முக்கியத்துவத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய குவாண்டம் இயக்கம் மற்றும் இத்தகைய சூழல்சார் அமைப்பில் பங்கேற்று உள்ள பல்வேறு ஏஜென்சிகள் மற்றும் பங்குதாரர்களின் முயற்சிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசு, கல்வி மற்றும் தொழில்துறையில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்குதாரர்கள் செயல்பாட்டு திட்டங்களை வகுத்துக் கொள்ள உதவும் வகையில் இந்த உத்திசார் அறிக்கை ஒரு அடித்தள பகுப்பாய்வை வழங்குகிறது.

குவாண்டம் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசிய பேராசிரியர் சூட், எந்தவொரு நாடும் பின்தங்கியிருக்க விரும்பாத ஒரு பகுதி இது என்று எடுத்துரைத்தார், ஏனெனில் இது உத்திசார் சுயாட்சிக்கு முக்கியமானதாகும். இந்தியாவுக்கான இந்தத் துறையில் உள்ள இடைவெளிகள் மற்றும் சாத்தியக்கூறுகள் குறித்து மேலும் பேசிய அவர், "இந்தியா குவாண்டம் வன்பொருளில் முதலீடு செய்ய வேண்டும், இறக்குமதியை நாம் சார்ந்திருப்பதை குறைக்க வேண்டும், குவாண்டம் கம்ப்யூட்டிங்கின் அனைத்து பகுதிகளிலும் ஏற்படும் முன்னேற்றங்கள் அதற்கு உதவும். புத்தொழில் நிறுவனங்களுக்கு அதிக நிதியை கொண்டு வர வேண்டும், முதலீட்டைக் குறைக்க வேண்டும் - அதாவது தயாரிப்புகளுக்கான சந்தைகளை உருவாக்க வேண்டும். இந்தச் சூழல் அமைப்பை உருவாக்குவதில் அரசு, தனியார் துறைகள், கல்வியாளர்கள் அல்லது புத்தொழில் நிறுவனங்கள் என அனைத்து நிறுவனங்களும் பங்கு வகிக்கின்றன, "என்று அவர் கூறினார்.

- Ba.சரவணன்

ஐன்ஸ்டீன் சொன்ன



நம்மில் பலரை, இந்த உலகிலேயே மிகப் பிரபலமான அறிவியல் சமன்பாடு எதுவென்றுக் கேட்டால், எல்லோரும் தயக்கமில்லாமல் சொல்லக்கூடிய பதில் "$E=mc^2$" என்பதாகத்தான் இருக்கும்!

அதைக் கண்டுப்பிடித்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் எனும் மாமேதை என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்த மூன்றே எழுத்துக்களைக் கொண்ட சமன்பாடு, சூரியன் பிரகாசிப்பதையும், நட்சத்திரங்கள் ஜோலிப்பதையும், இந்த மகா பிரபஞ்சத்தின் ரகசியங்களை விளக்கும் திறன் கொண்டது என்பது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்! இந்த சேவையை மீதும் செய்யவில்லை இந்த சமன்பாடு... விரும்பியோ, விரும்பாமலோ, ஒரே அணுகுண்டால் லட்சக்கணக்கான மனிதஉயிர்கள் நாசமாவதற்க்கும் பாதை வகுத்தது.



E = Energy
M = Mass
C = Celeritas or Speed of light
2 = Squared

இந்த அறிவியல் விந்தைக்குப் பின்னால் ஐன்ஸ்டைன் ஒருவரது உழைப்பு மாத்திரம் இல்லை. அதன் பின்னே பல மேதைகளின் வியர்வையும், ரத்தமும், காதலும் கலவையாகக் கலந்த ஒரு நூற்றாண்டு வரலாறு மறைந்துள்ளது. அதைத்தான் இப்போது நாம் கொஞ்சம் அலசப் போகிறோம்.

E = Energy

Michael Faraday, British scientist, 1791-1867

லண்டனின் சேரிப்பகுதியில், ஏழைக் கொல்லனின் மகனாகப் பிறந்த மைகேல் ஃபாரடே எனும் இளைஞனுக்கு. அடிப்படை கல்வி அறிவு ரொம்பவும் கிடையாது. புத்தகம் பைண்ட் செய்யும் ஒருக் கடையில் வேலைப்பார்க்கும் போது, அங்கு வரும் புத்தகங்களைப் படித்தே தன் அறிவை வளர்த்துக்கொண்டார். இப்படி வளர்ந்து பின்னோருக் காலத்தில் பெருமைமிக்க இங்கிலாந்தின் ராயல் சொசைட்டியில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து புகழ்ப் பெற்றார்.

1800 களின் துவக்கத்தில் ஆற்றல் (energy) என்பது பிரபஞ்சமளாவிய ஒரே ஆக்கப் பொருள் என்ற கருத்து இல்லாமலிருந்தக் காலமது. நெருப்பிலிருந்து வரும் வெப்பமோ, சூரியனிலிருந்து வரும் கதிரோ, வெவ்வேறானவை என்று எண்ணிக்கொண்டிருந்தனர்.



அப்படிப்பட்ட காலத்தில்தான் நம்ம ஃபரடே காட்சியில் வருகிறார். தன் அளப்பரிய உந்துதலாலும் கூர்ந்து நோக்கும் திறனாலும் சில விஷயங்களை ஆராய முற்பட்டார். மிசாரம் பாயும் ஒரு கம்பியின் அருகே கொண்டுசெல்லப்படும் ஒரு காந்தமுள் கண்ணா பின்னவென்று ஆடி ஏதோ ஒரு திசையில் நிற்பதைக் கண்டு வியந்தார்!

இப்படி பல கால ஆராய்ச்சிக்குப் பிறகு மின் கம்பியை சுற்றி, மின்சார ஓட்டத்துக்கு நேர்க்கோணத்தில் காந்த வயல் (magnetic field) உருவாகிறது என்பதயும் கண்டுபிடித்தார். அதைப் போலவே ஒரு காந்தத்தைக் கொண்டு மிரார ஓட்ட திசையையும் மாற்றிக் காட்டினார். இதுதான் உலகின் முதல் மிசார மோட்டார்! இப்படியாக மின் சக்தியும், காந்த சக்தியும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை என்றும் நிலைநாட்டினார். இப்படியாக மின்காந்தவியல் புதிய அறிவியல் பிரிவு பிறந்தது! இங்கிருந்துதான் ஐன்ஸ்டைன், ஆற்றல் என்பது ஆக்கவோ அழிக்கவோ முடியாத ஒன்று, ஆனால் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறக்கூடியது என்பதை பயன்படுத்திக்கொண்டார்.

M = Mass

Antoine-Laurent Lavoisier, French nobleman, tax collector, lawyer and amateur chemist, 1743-1794.

அன்டோனி லாரென்ட் லவோயிசியர்(?) எனும் அமெச்சூர் வேதியல் விஞ்ஞானி, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த, வரி வசூலிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்திவந்த ஒரு செல்வச் சீமான். இவரின் வேதியல் பங்களிப்பு அமெச்சூர் தனமானது என்றுக் கூறப்பட்டாலும், இவரை நவீன வேதியலின் தந்தை என்றும் கூறுவர். இவரே ஆக்சிஜனுக்கும் ஹைட்ரஜனுக்கும் நாமகர்ணம் நிகழ்த்தியவர். இவை இரண்டும் சேர்ந்தால்தான் தண்ணீர் என்பதைக் கூறி, மனிதன் நிலவு வரை செல்ல சிவப்புக்கம்பளம் விரித்தவர்.

இவரது அயராத உழைப்பால் இவர் உலகுக்கும் குறிப்பாக ஐன்ஸ்டைனுக்கும் உணர்த்திய உண்மை... ஆற்றலைப்போலவே, வேந்தவித மாற்றம் ஏற்பட்டாலும், ஒருப் பொருளின் நிறை கூடவோ குறையவோ செய்யாது! அவரின் காலத்தில் ஒரு நம்பிக்கை இருந்தது. அது, ஒருக் கட்டை (மர) எரியுட்டப்பட்டால், அதிலுள்ள ப்லோகிஸ்டன் (phlogiston) எனும் பொருளின் மூலமாக, அப்பொருளின் நிறை, நிரந்தரமாக வெளியேறி-விடுகிறது. ஆகவேத்தான் உபரியாகக் கிடைக்கும் சாம்பலின் எடை, ஒரிஜினல் மரக்கட்டையின் எடையைவிட குறைந்துக் காணப்படுகிறது என்று எல்லா அறிவியலாளரும் நம்பினர்.



அப்போதுத்தான் நம்ம லவோயிசியர், தன் அயராத உழைப்பினாலும், அறிவார்ந்த, அன்பும் அழகும் நிறைந்த தன் மனைவியின் உதவியோடு, எப்படிப்பட்ட மாற்றம் நிகழ்ந்தாலும், ஒருப் பொருளின் நிறை கூடவோ குறையவோ செய்யாது... ஒரு வேதியல் சமன்பாட்டின் இருப்பக்கங்களும் எப்போதும் சமமாக இருக்கும் என்பதையும் நிரூபித்தார். அவரின் இந்தக் கண்டுப்பிடிப்பே ஐன்ஸ்டைனின் சார்புக்கொள்கையில் முக்கியப் பங்காற்றியது.

ஆனால் இதுவே இவரின் கடைசி கண்டுப்பிடிப்பாக போய்விட்டது. பிரெஞ்சு மக்களுக்கு விடிவெள்ளியாக

வந்த புரட்சி, இவருக்கு முற்றுப் புள்ளியாக மாறிப்போனது. இவர் பணக்கார வர்கத்தின் பிரதிநிதி என்பதால், பல்வேறு குற்றங்கள் சாட்டப்பட்டு, தலை துண்டிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இது நடந்து ஒன்றரை வருடங்கள் கழித்து, பிரெஞ்சு அரசாங்கம் இவரை குறமற்றவர் என்று பிரகடனப்படுத்தியது. அதன்பின்னே அவரின் சில உடைமைகளை அவரின் மனைவியிடம் அளிக்கப்பட்டபோது, அதன் மீது ஒரு துண்டுச் சீட்டில் 'தவறாக குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட லவோயிசியரின் விதவைக்கு....' என்று எழுதிருந்தது! பாவம். என்ன ஒரு சோகம்?

"It took them only an instant to cut off his head, but France may not produce another like it in a century." - Joseph-Louis Lagrange, an Italian-born mathematician and astronomer.

C = Celeritas or Speed of light

James Clerk Maxwell, British mathematical physicist, 1831-1879. and Michael Faraday

எல்லாம் சரி. ஆற்றலும், நிறையும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. அதனால் அவை சமன்பாட்டில் இடம் பிடித்துள்ளன. ஆனால் இந்த ஒளி எப்படி உள்ளே வந்தது? மிக மிக வேகமாக செல்லுவதற்கு லத்தீன் மொழியில் செலிரிட்டஸ் (celeritas) என்று

அழைக்கப்படுகிறது. மனிதன் அறிவுக்கு எட்டியவரை மிக வேகம்மாக செல்லக்கூடியது ஒளி மட்டுமே. வினாடிக்கு 3,00,000 கிலோமீட்டர்கள்! இங்கே மீண்டும் மைகேல் ஃபாரடே உள்ளே வருகிறார். ரொம்பக் காலமாகவே அவர் ஒளியும், மிசாரத்தைப் போலவும், காந்தப்புலத்தைப் போலவும், மின்காந்தவியளைச் சார்ந்ததுத்தான் என்று உறுதியாக நம்பினார்.

ஆனால் அதைக் கணிதத்தனமாக நிரூபிக்க தேவையான எண்கணித அறிவு அவரிடம் போதியதாக இல்லை. என்ன இருந்தாலும் அவர் ஒரு ரொம்பவும் படிக்காதமேதைத்தானே! அங்கத்தான் நன்கு படித்த கணிதத்தில் புலியான ஜேம்ஸ் கிளார்க் மேக்ஸ்வெல் எண்ணு இளைஞர் வருகிறார். அவர்கள் இருவரும் சேர்ந்து, மின்சாரத்திலிருந்து, காந்தப்புலமும், காந்தப்புலத்திளிருந்து மின்சாரமும்... ஒரு குறிப்பிட்ட வேகத்திலிருக்கும்போது உண்டாகும். அந்த வேகம்தான் ஒளியின் வேகம்!, அது எப்போதும் மாறாது என்று எண்கணிதம் மூலமாக உலகுக்கு நிரூபித்தனர்.

இதையும் ஐன்ஸ்டைன் தன் சமன்பாட்டில் சேர்த்துக்கொண்டார். ஒளியின் வேகம் மாறது என்றால், வேறு ஏதோ ஒன்று மாறித்தான் ஆகவேண்டும். அது நிறை. ஒருப் பொருளின் வேகம் ஒளியின் வேகத்தை நெருங்கும் போது அதன் நிறை அதிகரிக்கும் என்றும் அது அது அதன் ஆற்றலை சார்ந்திருக்கும் என்பதையும் குறித்துக்கொண்டார்.

2 - Squared

Emilie du Chatelet, French aristocrat, mathematician and physicist, 1706-1749.

இந்த மகா சமன்பாட்டில் உள்ள ஒரே எண் '2'. அதுவும் நேர் அர்த்தத்தில் இலை. 'அடுக்கு' என்ற முறையில் உள்ளது. ஒளியின் வேகம் என்ற ஒரு எண் அதே எண்ணால் பெருக்கப்படவேண்டும். 670 மில்லியன் X 670 மில்லியன் (மணிக்கு 670 மில்லியன் மைல்கள்). அந்த தொகை எவ்வளவு என்றுத் தெரியுமா? 448,900,000,000,000,000. சரி இருக்கட்டும். ஏன் அந்த 2 அடுக்கு? (Square?).

இதற்க்கான விடை எமிலி டு ஷாட்டலே எனும் இளம் பிரெஞ்சு சீமாட்டியிடம் இருந்து வந்தது. இந்த எமிலி தான் வாழ்ந்த 18 ஆம் நூற்றாண்டுப் பெண்களில் மிகவும் வித்தியாசமான புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தார். அவருக்கு புலமை இல்லாத கலையே இல்லை எனலாம்.

சர் ஐசக் நியூட்டனின் Principia Mathametica அறிவியலின் வேதத்தை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கும் அளவிற்கு அறிவியல் மற்றும் மொழி ஞானம் கொண்டவர். தன் 23 வது வயது முதலே கணிதத்தில் கரைக்கண்டு, ஐசக் நியூட்டன் முதலான மேதைகளுக்கே சவாலாகத் இருந்தார்.

ஒரு நகரும் பொருளுக்கு ஆற்றல் உண்டு. ஒருப் பந்து, அதேப்போன்ற பந்தைவிட இரு மடங்கு வேகத்தில் சென்றால், அதன் ஆற்றலும் இரு மடங்கு இருக்கும் என்பது நியூட்டனின் கூற்று. ஆனால் நம்ம எமிலி மேடம் கூறுகிறார், அதன் ஆற்றல் நான்கு மடங்கு இருக்குமென்று! சொல்லுவதோடு நிற்கவில்லை... அதை ஒரு சாதாரண சிறு பரிசோதனை மூலம் நிரூபிக்கவும் செய்தார். சிறு ஈய குண்டுகளை குறிப்பட்ட உயரத்தில்லிருந்து, மிருதுவான களிமண் மீது போட்டு, அது எவ்வளவு தூரம் உள்ளே பதிகிறது என்று அளந்து கணக்கிட்டார்.

அப்போதுதான் அந்த களிமண்ணின் மீது போடப்பட்ட குண்டுகளின் ஆற்றல் அவைகளின் வேகத்தின் இரண்டு மடங்காக இல்லை, இரண்டு அடுக்காக (SQUARE) இருக்கும் என்று நிரூபிக்கப்பட்டு, ஆனானப்பட்ட நியூட்டன் சொன்ன ஒரு விதி பொய்யாகப் போனது இந்தப் பெண்ணால்! இதைத்தான் ஐன்ஸ்டைன் தன்சமன்பாட்டில் உபயோகப்படுத்திக்கொண்டார்.

மேடம் எமிலியைப்பற்றி இன்னும் சில கூடுதல் தகவல்கள். இவருக்கு ஏகப்பட்ட ஆண்களின் தொடர்பு இருந்ததாம்! அதுவும் அவரின் கணவருக்குத் தெரிந்தே! அதில் ஒருவர் புகழ்ப்பெற்ற 'வைர நெஞ்ச வால்டேர்'ரும் ஒருவர். இருவரும் சேர்ந்து ஒரு புத்தகமும் எழுதியுள்ளனர். (Elements of Newton's Philosophy). இவ்வளவு இருந்தும் பரிதாபகரமாக, தன் 43 ஆம் வயதில், ஒரு இளம்கவிஞனால்கர்ப்பமாகி, ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்துவிட்டு, ஆறு நாட்கள் கழித்து இறந்துப்போனார்!

'C' என்ற ஒளியின் வேகம் ஒரு மாறா எண் என்பதை முதலில் புரிந்துக் கொண்டவர்களில் ஐன்ஸ்டைன் முதலாமவர். மிக நுட்பமாக கவனியுங்கள்.... நாம் என்னதான் வேகமாக சென்றாலும், நம்மிலிருந்து புறப்படும் ஒளி, மணிக்கு 670 மில்லியன் மைல் வேகத்தில் நம்மை விட்டுப் போய்விடும்! (ஆகவே ஒளியின் வேகத்தில் யாரும் பிரயாணிக்கவே முடியாது!) இங்கேதான் மேக்ஸ்வேல்லின் ஐடியாவை பிடித்துக்கொண்டார் ஐன்ஸ்டைன். 'C' என்பது மாற எண் என்றால், ஒளியின் வேகத்தை அடையும் ஒருப் பொருளின் நிறை என்னவாகும்? அது கண்டிப்பாக அதிகரிக்கும்! இதிலிருந்து அவர் கூறுவது நிறையும், ஆற்றலும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை. ஏன்...? அவை இரண்டும் ஒன்றே..! ஆற்றல்தான் நிறை, நிறைதான் ஆற்றல்!

C^2 இன் மதிப்பு மிக மிக மிக அதிகமாக இருப்பதால், ஒரு சின்ன கடுகளவு நிறைக்கொண்ட பொருளுக்கு அளவில்லாத ஆற்றல் இருப்பது நிச்சயம்! இந்த சமன்பாட்டின் சரியான புரிதல் நட்சத்திரங்களின் இதயத்தில் என்ன நடக்கிறது என்பதையும், நாமெல்லாம் அந்த நட்சத்திர துகள்களால் உருவானவர்கள் என்பதையும், சூரியனிலிருந்து நமக்குக் கிடைக்கும் எல்லா ஆற்றலும் $E=mc^2$ என்பது புரிம்துவிடும்! நட்சதிரங்கள் தங்களின் அளவிடமிடியாத நிறையை ஆற்றலாக மாற்றியபடியே உள்ளன என்பதும் விளங்கிவிடும்.

மேற்கூறிய அனைத்து விவரங்களும் David Bodanis எழுதிய E=mc2 : A Biography of the World's Most Famous Equation என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டது.

- நா வீ சிவசங்கர்

மனைவி பெயரில் சொத்து எழுதும்போது இதை கவனியுங்க..

உயிலின் முக்கியத்துவம்

உயில் எழுதும்போது தேவைப்படும் ஆவணங்கள் என்னென்ன?

வாரிசுகளுக்கு உயில் எழுதி வைத்தால் மனைவிக்கும் அதில் பங்கு கிடைத்துவிடுமா?

எத்தனை முறை உயில்களை எழுதி வைக்கலாம்?

இதன் நடைமுறைகள் என்ன என்பதை பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

உயில் எழுதும்போது, ஒருவர் தான் சுயமாக சம்பாதித்த சொத்துக்களை மட்டுமே பிறருக்கு எழுதி வைக்கலாம்..

மற்றபடி பூர்வீக சொத்துக்களை யாருக்குமே உயிலாக எழுதி வைக்க முடியாது. அதை பிரித்து எழுதி வைக்கவும் முடியாது.

வேண்டுமானால், பூர்வீக சொத்துக்களை அனுபவித்து கொள்ளலாம்.

அதேபோல, தாத்தா, பாட்டி இருந்தாலும்கூட, சொத்துக்களை பிரித்து வாரிசுகளுக்கு தர முடியாது.

உயில் எழுதி வைக்காவிட்டாலும்கூட, அவர்களின் நேரடியாக வாரிசு அடிப்படையில் பிள்ளைக்கு வந்துவிடும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால், பூர்வீக சொத்தை உயிலாக எழுதி வைக்க வேண்டுமானால், தங்களின் பெயருக்கு சொத்துக்களை மாற்றி, அதன்பிறகே உயிலாக எழுதி வைக்க முடியும்.

மனைவி பங்கு: வாரிசுகளுக்கு உயில் எழுதி வைத்தால், மனைவிக்கும் அதில் பங்கு கிடைத்துவிடும் என்று கருத முடியாது.

அந்த சொத்துக்கு மனைவி எந்த வகையிலும் உரிமை கோரவும் முடியாது.

எனவே, ஒருவர் தன்னுடைய சுய சம்பாத்தியத்தில் சேர்த்து வைத்த சொத்தை தன்னுடைய வாரிசுகளுக்கு உயில் எழுதி வைப்பதாக இருந்தால், மனைவியையும் ஒரு பங்குதாரராக சேர்த்து உயில் எழுதலாம்.

அதேபோல் தன்னுடைய சுய சம்பாத்திய சொத்துக்களை மனைவி பெயரில் மட்டுமே எழுதி

வைப்பதும், சிக்கலை தந்துவிடும்.

காரணம், உயிலில் மனைவி பெயரை மட்டும் குறிப்பிட்டுவிட்டால், வாரிசுகளால் உரிமை கொண்டாட முடியாது.

மனைவி பெயர் மட்டுமே உயிலில் இருந்தால், அது அவருக்கு மட்டுமே உரிய சொத்தாக மாறிவிடும்.

அதன்பிறகு மனைவி, அந்த சொத்தை யாருக்கு கொடுக்க விரும்புகிறாரோ அவருக்குதான் அது போய்ச்சேரும்.

வாரிசுகள்: அதேபோல, வாரிசுகளில் ஒருவருக்கு அதிகமாக சொத்துக்கள் கிடைத்தால், மற்றவர் அதை எதிர்க்க முடியாது.

உதாரணத்துக்கு வாரிசுகளில் 4 பேர் இருக்கிறார்கள் என்று வைத்து கொள்வோம்.

இதில், 3 பேருக்கு மட்டுமே சொத்தை பங்கிட்டு தந்துவிட்டால், அது செல்லுபடியாகும்.

4வது வாரிசு, தனக்கு பாகம் பிரித்து தரவில்லை என்று எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்க முடியாது.

வாரிசுகளுக்கும் சம அளவில்தான் சொத்து

பிரிக்கப்பட வேண்டும் என்று நிர்பந்திக்கவும் முடியாது.

மனைவி வாரிசுகளை தவிர மற்ற வேறு யாருக்கு வேண்டுமானாலும் சொத்தை பிரித்து கொடுக்கலாம்.

எனவே, உயில் எழுதும்போது யார் யாருக்கு சொத்து கிடைக்க வேண்டும் என்பதை தெளிவாக எழுதிவிடுவது நல்லது.

உயில் எழுதுவதற்கு ஆவணங்கள் எதுவும் தேவையில்லை.

ஆனால், உயில் எழுதப்படும் சொத்தின் விவரங்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

சாதாரண வெள்ளை தாள், பத்திர தாள் என எதில் வேண்டுமானாலும் உயில் எழுதி வைக்கலாம்.

எனினும், முறைப்படி உயில் எழுதுவதாக இருந்தால் பேப்பரில் ஸ்டாம்ப் ஒட்டி உயிலை எழுதி 2 பேர் சாட்சி கையெழுத்து போட்டு அதை ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவு செய்து கொள்வது நல்லது.

உயில்களை வாரிசுகளுக்கு மட்டுமல்லாமல் விருப்பமானவர்களுக்கும் எழுதி வைக்கலாம்.

டிரஸ்ட்களுக்கும் எழுதி வைக்கலாம். இன்னும் பிறக்காத குழந்தைக்குகூட உயில் எழுதலாம். னீபிறக்கப்போகும் பேரக்குழந்தைக்கும் உயில் எழுதலாம்.

ஆனால், 18 வயது நிரம்பாத நபருக்கு உயில் எழுதப்பட்டால், அதற்கு கார்டியனாக ஒருவரை நியமிக்க வேண்டும்.

உயில் எழுதியவர் இறந்துவிட நேர்ந்தால், அந்த உயிலை கோர்ட்டில் மெய்ப்பிக்க வேண்டும்.

3 வருடத்துக்குள் உயிலை மெய்ப்பிக்காவிட்டால், தாமதத்துக்கான காரணங்களை கோர்ட்டில் சொல்ல வேண்டியிருக்கும் என்பது விதியாகும்.

அதேபோல, உயில் எழுதும்போது பேனாவிலும் எழுதலாம். கம்ப்யூட்டரில் டைப் செய்து கொள்ளலாம்.

ஒருவர் தன்னுடைய பெயரில் உள்ள அசையும் பொருள்கள், அசையாத பொருள்கள் என்னென்ன என்பதை முன்கூட்டியே எழுதி தயாராக வைத்து கொள்ள வேண்டும்.

எந்த சொத்தை, யாருக்கு, எவ்வளவு தருவது என்றும் தீவிரமாக யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

2 சாட்சி கையெழுத்து போடுபவர்கள், உயிலுக்கு சம்பந்தம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

- M.**திலிப்குமார்**

இதுல்லாம் எதோச்சைசையா நடக்குதா! இல்ல ராசி, நட்சத்திரம் பிரச்னையா?

• அவசரமா பெட்ரோல் அடிக்க போனா பெட்ரோல் பங்குல நமக்கு முன்னாடிஇருக்கரவன் டேங் மூடி திறக்க முடியாம தடுமாறிட்டு இருப்பான்.

• ஏடிஎம்ல பணம் எடுக்கபோனா அங்க ஒருத்தன் ரொம்ப நேரம் நின்னு நோண்டிட்டு இருப்பான்.

- சிக்னல் விழுந்தவுடனே எல்லாறுமே போனாலும் நமக்கு முன்னாடி இருக்கரவன். வன்டிய ஆப்பன்னிட்டு ஸ்டார்ட் பன்னிட்டு இருப்பான்.
- ஹெல்மெட் போடாம தப்பிச்சு போயிடலாம்னு பார்த்தா நமக்கு முன்னாடி போரவன் பிரேக் அடிச்சு நம்மள நிறுத்தி போலீஸ் கிட்ட புடிச்சி கொடுத்துட்டு போவான்.
- டோல் கேட்ல எல்லா லைனுமே போகும் நமக்கு முன்னாடி வந்தவன் காசு தராம எதாவது ஒரு கார்டை காட்டி சன்டை பன்னிட்டு இருப்பான்.
- ஆம்லேட் ஆடர் பன்னி அரைமனி நேரம் வெயிட் பன்னிட்டு இருப்போம் சப்ளையர் ஆள் தெரியாம பக்கத்துல இருக்கரவனுக்கு வச்சி சார் ஆம்லேட் கேட்டீங்கல்ல கொஞ்சம் வெயிட் பன்னுங்க இப்ப போட்ரலாம்னு சொல்லுவான்.
- பேங் மேனேஜர பாக்க போனா ஒருத்தன் உக்காந்து ஊர் கத பேசிட்டு இருப்பான்.
- பஸ்ல நமக்கு பின்னாடி வந்தவன் அடுத்த ஸ்டாப்ல இறங்க வேண்டியவன் சீட்ட புடிச்சி உக்காந்துக்குவான்.
- டீ கட மாஸ்டர் தூள் மாத்தி பத்து டீக்கு அப்புறம் தா நமக்கு டீ குடுப்பான்.
- சூடா வட இருக்குன்னு பாத்தா நமக்கு முன்னடி ஒருத்தன் விருந்தாடி வந்திருக்காங்கன்னு அம்பது வட பார்சல் வாங்குவான்.
- பந்தில எந்திருகட்டும் உக்காருவம்னு வெயிட் பண்ணா, மாப்ள இங்க வா நா எந்திருக்க போறேன்னு கூப்டு ஒருத்தர உக்கார வச்சிட்டு போவான்.

இதுல்லாம் எதோச்சைசையா நடக்குதா! இல்ல ராசி, நட்சத்திரம் பிரச்னையா?

- **தமிழ்வீரன்**

திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற ஆண்டு விழா





காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கூடுவாஞ்சேரி அருகில் உள்ள மாடம்பாக்கம் கிராமத்தில் திருவள்ளுவர் கலை இலக்கிய மன்றத்தின் 9-ஆம் ஆண்டு விழா 23-03-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற தலைவர் E.திருநாவுக்கரசு தலைமை தாங்கினார், செயலாளர் டில்லி ராஜ் வரவேற்பு நிகழ்த்தினார், பொருளாளர் முல்லைநாதன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக நாவேந்தர் பாவலர் குடியாத்தம் குமணன் ஐயா அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து எழுத்தாளர் சு.வெங்கடேசன் எழுதிய “வேள்பாரி” என்ற நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து மாடம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட பள்ளி மாணவ-மாணவியர் பங்கேற்று திருக்குறள் ஒப்பிவித்தல், நடனம், நாட்டுப்புற பாடல்கள், சிலம்பம் கவிதை, யோகா, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளில் அசத்தினர்.

திருக்குறளில் வாழ்வியல் சிந்தனை, திருக்குறளில் பெண்ணிய சிந்தனை, திருக்குறளில் மருத்துவம் மற்றும் பிறப்பால் அனைவரும் சமம் ஆகிய

தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஆசிரிய பெருமக்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியை திருவள்ளூர் கலை இலக்கிய மன்ற உறுப்பினர் திரு. ஆரோக்கிய பிரிட்டோ அவர்கள் தொகுத்து வழங்கினார்.

- M.பாலசுப்ரமணியன்

Chandru Law Academy

Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu ✆ : 073396 50446

Conducting

COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS

(All Major and Minor Acts)

COURSES

1 District Judge
2 Magistrate / Munsif
3 Assistant Public Prosecutor (APP)
4 All India Bar Examination (AIBE)
5 Common Law Admission Test (CLAT)

Offline Class / நேரடி வகுப்புகள்

Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays

Online Class / இணைய வழி வகுப்புகள்

Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP

@ VELACHERY
Chennai.

R. CHANDRASEKARAN

Advocate
Chandru Law Academy
Founder & Director

Note : No fees for specially challenged & Third gender person

For Registration Contact **+91 73396 50446 / 90804 48871**

19 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் தமிழ்நாடு காவல்துறை சிறப்பாக செயல்பட்டு சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றது

25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டி 2024-2025 நிறைவு விழா 21.03.2025 அன்று 16.00 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த போட்டியானது துப்பாக்கி சுடும் வீரர்களின் அசாத்திய திறமை மற்றும் அசாதாரண குறிபார்த்துசுடும் திறன்களை வெளிப்படுத்தியது. துப்பாக்கிசுடும் வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர கடுமையாக போராடினர்.

தமிழ்நாடு காவல்துறை அகில இந்திய காவல்துறை துப்பாக்கிசுடும் போட்டியை மூன்றாவது முறையாக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி 2024-2025 செங்கல்பட்டு மாவட்டம், ஒத்திவாக்கம், கமாண்டோபள்ளி பயிற்சி வளாகத்தில் உள்ள துப்பாக்கி சுடும் தளத்தில் 17.03.2025 முதல் நடத்தப்பட்டது.

25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கிசுடும் போட்டி 2024-2025 ன் பிரம்மாண்டமான நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதியநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

சிறப்பு விருந்தினரை தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத் தலைவர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப. அவர்கள் வரவேற்று ஏற்பாட்டு குழு உறுப்பினர்கள். நடுவர் குழுவினர்கள், குழு மேலாளர்கள் மற்றும் அதிகாரிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அலங்காரகாப்பு அணிவகுப்புமரியாதையை ஏற்றுக்கொண்டார். ஒழுங்கு, ஒற்றுமை மற்றும் பெருமை ஆகியவற்றின் அடையாளமாக தோழமைஉணர்வை வெளிப்படுத்தும் வகையில், இப்போட்டியில் பங்கேற்ற அணிகளின் அணிவகுப்புமரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத் தலைவர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டுவாரிய பிரதிநிதி உரையாற்றினார். பின்பு போட்டியாளர்களுக்கு இடையேயான ஆரோக்கிமான போட்டி உணர்வையும், தமிழ்நாடு காவல்துறையின் நேர்த்தியான அணுகுமுறையையும் பாராட்டினார்கள்.

துப்பாக்கிசுடும் போட்டியில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பதக்கங்களும் பரிசு கோப்பைகளும் வழங்கினார்கள்.

பல்வேறு பிரிவுகளில் பதக்கம் வென்ற வீரர்களின் விபரம் பின்வருமாறு:-

ரைபிள் துப்பாக்கிசுடும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்தஅணி) அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், இரண்டாவது இடத்தை எல்லைபாதுகாப்பு படையும், மூன்றாவது இடத்தை அசாம் மாநில காவல்துறையும் பிடித்தார்கள்.

பிஸ்டல் / ரிவால்வர் துப்பாக்கிசுடும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்தஅணி) மத்திய சேமக் காவல் படையும், இரண்டாவது இடத்தை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், மூன்றாவது இடத்தை தமிழ்நாடு காவல்துறையும் பிடித்தார்கள்.

கார்பைன் /ஸ்டென்கன் துப்பாக்கிசுடும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை (சிறந்தஅணி) இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையும், இரண்டாவது இடத்தை ஒடிசா மாநில காவல்துறையும், மூன்றாவது இடத்தை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும் பிடித்தார்கள்.

அனைத்து பிரிவுகளிலும் சிறப்பாக செயல்பட்டு ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், இரண்டாவது இடத்தை எல்லை பாதுகாப்பு படையும் பிடித்தார்கள்.

மாநிலங்களுக்கிடையே ஒட்டு மொத்தமாக சிறப்பாக செயல்பட்ட அணியாக சாம்பியன்ஷிப் கோப்பையை தமிழ்நாடு காவல்துறையும், அதனைத் தொடர்ந்து இரண்டாவது இடத்தை ஒடிசா மாநில காவல் துறையும் பிடித்தார்கள்.

பிஸ்டல் / ரிவால்வர் துப்பாக்கி சுடும் பிரிவில் சிறப்பு பாதுகாப்பு படை ஆய்வாளர் திரு.அமர் சிங் சிறந்த சுடுதலுக்கான (Best Shot) பரிசையும், கார்பைன் / ஸ்டென்கன் துப்பாக்கிசுடும் பிரிவில் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை காவலர் திரு. விஷால் குமார் சிறந்த சுடுதலுக்கான (Best Shot) பரிசையும் வென்றார்கள்.

பதக்கங்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதியநிதி ஸ்டாலின் அவர்களால் நினைவுப்பரிசு வெளியிடப்பட்டது. மேலும் 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கிசுடுதல் போட்டி 2024-2025 நிறைவு பெற்றதாக அறிவித்தார்.

பின்னர், 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி நிறைவு பெற்றதை முன்னிட்டு அகில இந்திய காவல்துறை விளையாட்டுக்கட்டுப்பாட்டுவாரிய கொடியை சிறப்பு விருந்தினர் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்தார்.

தமிழ்நாடு பேண்ட் வாத்தியகுழுவினரின் பேண்ட் வாத்திய நிகழ்ச்சியுடன் நிறைவுவிழா இனிதே முடிவுற்றது.

- A.சரவணன்

மக்களே ஜாக்கிரதை! இந்த மூன்று விஷயங்களை கூகுள் செய்தால் நீங்கள் சிறைக்கு செல்லலாம்!

இந்த நவீன உலகில் நினைத்த நேரத்தில் எது குறித்து சந்தேகம் ஏற்பட்டாலும் நொடிகளில் கூகுள் செய்து அதற்கான விடையைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம். ஆனால், அப்படி கூகுள் செய்யும் போது கவனமாக இருங்கள். ஏனென்றால், சில குறிப்பிட்ட விஷயங்கள் குறித்து நீங்கள் சாதாரணமாகக் கூகுள் செய்தாலும் கூட அது உங்களைச் சட்டச் சிக்கலில் மாட்டிவிடும் ஆபத்து இருக்கிறது.

இந்த காலத்தில் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. முன்பு போல எதாவது ஒரு சந்தேகம் ஏற்பட்டால் அதைத் தீர்க்க காத்திருக்கத் தேவையில்லை. கூகுள் செய்தால் எந்தவொரு விஷயத்திற்கும் விடை கண்டுபிடிக்கலாம்.

இதுபோல விரும்பிய நேரத்தில் விரும்பிய விஷயம் குறித்து கூகுள் செய்து தெரிந்து கொள்வது என்பது மிகப் பெரிய வசதியாக இருந்தாலும், இத்துடன் சில சிக்கல்களும் உள்ளன. கூகுள் தளத்தைப் பலர் நல்ல விஷயங்களுக்குப் பயன்படுத்துவதைப் போல சிலர் இதை ஆபத்தான மோசமான செயல்களுக்கும் பயன்படுத்துகின்றன. இதனால் கூகுளில் சில தேடல்கள் ஆபத்தானவை மட்டுமல்ல.. கடுமையான சட்ட விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

உலக நாடுகள் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் அமைதியைப் பேணவும் ஆன்லைன் செயல்பாடுகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. சில விஷயங்கள் குறித்து நாம் தேடும்போது அவை அபராதங்கள் அல்லது சிறைத் தண்டனைக்குக் கூட வழிவகுக்கும். ஏது கூகுளில் சேர்ச் செய்தாலே தண்டனையா என்று ஷாக் ஆக வேண்டாம்.. இவை அனைத்துமே சட்டவிரோதமானவை தான். இது குறித்துத் தேடும்போது மட்டுமே அது நாம் சிறைக்குச் செல்லவும் காரணமாக அமைந்துவிடுகிறது.

அதில் முதலாவது வெடிகுண்டு தயாரிப்பது எப்படி என்று தேடுவது.. வெடிகுண்டு எப்படித் தயாரிப்பது எனத் தேடுவது பெரும்பாலான நாடுகளில் கடுமையான கிரிமினல் குற்றமாகும். ஆயுதங்கள், வெடிபொருட்கள் உள்ளிட்ட பயங்கரவாதம் தொடர்பான ஆன்லைன் தேடல்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். வெடிகுண்டு தயாரிப்பது எப்படி போன்ற கேள்விகள் அல்லது அது தொடர்பான



தேடல்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம். சும்மா ஒரு ஆர்வத்தில் நாம் தேடினால் அது கூட நம்மை வம்பில் மாட்டிவிடும் ஆபத்து இருக்கிறது.

இதுதான் இருப்பதிலேயே மோசமானது.. அதுதான் சிறார் ஆபாசப் படம் குறித்த தேடல்கள். உலகின் அனைத்து நாடுகளிலும் சிறார் ஆபாசப் படம் தடை செய்யப்பட்டது. சட்டவிரோதமானது. நமது நாட்டில் சிறார் ஆபாசப் படங்கள் வைத்திருப்போர், அதைப் பகிர்வோர் மீது போக்சோ உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோல சிறார் ஆபாசப் படங்களை வைத்திருக்கும் இணைய தளங்கள் மீதும் கூட சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இதைக் கூகுள் செய்வோரும் சட்டச் சிக்கலில் சிக்கிக் கொள்ளலாம்.

அதேபோல டிஜிட்டல் யுகத்தில் இணையப் பாதுகாப்பு என்பது ரொம்பவே முக்கியமானது. எனவே, ஹேக்கிங் செய்வது எப்படி எனத் தேடுவது கூட நம்மைச் சிக்கலில் மாட்டி விடலாம். குறிப்பாக முக்கியமான விவரங்கள், உதாரணமாகப் பெண்டகனை ஹேக் செய்வது குறித்து, அணு ஆயுதங்களை ஹேக் செய்வது குறித்தெல்லாம் தேடுவது தேவையில்லாத சட்ட பிரச்சினைக்குத் தான் வழிவகுக்கும்.

அதாவது இந்த விவகாரங்களில் நாம் சந்தேகத்தின் அடிப்படையில் கைதானால், இதுபோல நாம் சேர்ச் செய்துள்ளதையே கூட நீதிமன்றத்தில் ஆதாரமாக போலீசார் சமர்ப்பிப்பார்கள். நீங்கள் சும்மா சேர்ச் செய்தேன் எனச் சொன்னாலும் ஏற்க மாட்டார்கள். சமீபத்தில் ஷாரோன் ராஜ் வழக்கில் கூட கிரீஷ்மாவுக்கு மரண தண்டனை வழங்க அவரது கூகுள் தேடல்கள் முக்கிய காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

- D.பாமா

டெலிவரி ஊழியர்களுக்காக 'ஏசி' வசதியுடன் அமையுது ஓய்வறை

உணவு டெலிவரி செய்யும் ஊழியர்களின் வசதிக்காக, சென்னை மாநகராட்சி சார்பில், 'ஏசி' வசதியுடன் கூடிய ஓய்வறை அமைக்கப்பட உள்ளது. சென்னை போன்ற பெரு நகரங்களில், ஸ்விக்கி, சுமோட்டோ போன்ற நிறுவனங்கள், 24 மணி நேரமும், உணவு டெலிவரி செய்யும் பணியை வழங்கி வருகின்றன.

இந்த நிறுவனங்களில், உணவு டெலிவரி செய்யும் வேலையில், ஆயிரக்கணக்கான ஊழியர்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில், 10 சதவீதத்திற்கு மேல் பெண்கள். இவர்கள், மழை, வெயில் போன்ற கடினமான சூழல்களில்கூட டெலிவரி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

உணவு டெலிவரி இல்லாத நேரங்களில், சாலையோரங்கள், மரத்தடியில் ஓய்வெடுக்கும் சூழல் உள்ளது. சில ஹோட்டல்களில், உணவு டெலிவரி பணியாளர்கள், கழிப்பறை செல்வதற்கு கூட அனுமதி அளிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இந்நிலையில், உணவு டெலிவரியில் ஈடுபடுவோர் நலன் கருதி, சென்னையின் முக்கிய சாலைகளில், 'ஏசி'யுடன் கூடிய ஓய்வறையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மாநகராட்சி கமிஷனர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணாநகர், நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, மயிலாப்பூர், தி.நகர் போன்ற அதிக பணியாளர்கள் இருக்கும் இடங்களில், 600 சதுர அடி பரப்பளவில், இந்த ஓய்வறை அமைகிறது. ஓய்வூறையில், கழிப்பறை, குடிநீர், மொபைல் போன் சார்ஜ், இருக்கைகள் உள்ளிட்ட வசதிகள் இடம் பெறும்.

இதுகுறித்து, மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

உணவு டெலிவரி நிறுவனங்களுடன் இணைந்து, 'ஏசி' வசதியுடன் கூடிய ஓய்வறைகள் அமைக்கப்பட உள்ளன. இந்த ஓய்வறையை, டெலிவரி ஊழியர்கள் மட்டுமே பயன்படுத்தும் வகையில், பிரத்யேக அடையாள அட்டை வழங்கப்படும்.

மேலும், காவலர்களும் நியமிக்கப்பட்டு, அறைகளின் தூய்மை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இந்த வசதி, அரசின் அனுமதி பெற்று, விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

- S.ஜெயராஜ்

Advertisement Tariff

Full Page Color Back Wrapper	:	₹ 15,000/-
Full Page Color Inner Wrapper	:	₹ 12,000/-
Half Page Color Wrapper	:	₹ 8,000/-
Full Page Black & White	:	₹ 8,000/-
Half Page Black & White	:	₹ 5,000/-
Annual Subscription	:	₹ 240/-

Administrative Office:

PENA KURAL
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123

ராமாயணத்தில் ... இவர்கள் யார் யார்?



1. அகல்யை - ராமரின் அருளால் சாபம் நீங்கப்பெற்றவள்.
2. அகத்தியர் - ராமனுக்கு போர்க்களத்தில் ஆதித்ய ஹ்ருதயம் உபதேசித்த மாமுனிவர்.
3. அகம்பனன் - ராவணனிடம் ராமனைப்பற்றி கோள் சொன்னவன். ராமனின் அம்புக்கு தப்பிப்பிழைத்த அதிசய ராட்சஷன்
4. அங்கதன் - வாலி, தாரையின் மகன். கிஷ்கிந்தையின் இளவரசன்.
5. அத்திரி - அனுசூயா என்ற பத்தினியின் கணவர் ராமதரிசனம் பெற்றவர்.
6. இந்திரஜித் - ராவணனின் மகன். லட்சுமணனால் அழிந்தவன். மேகநாதன் என்ற பெயரையும் உடையவன்.
7. கரன், தூஷணன் - ராவணனின் தம்பிகள், ராமனின் கையால் அழிந்தவர்கள். ஜனஸ்தானம் என்ற இடத்திற்கு அதிபதிகள்.
8. கபந்தன் - தலையும் காலும் இல்லாத அரக்கன். ராமனால் வதைக்கப்பட்டவன். கந்தர்வ வடிவம் பெற்று ராம லட்சமணர்கள் கிஷ்கிந்தை செல்ல வழி காட்டியவன்
9. குகன் - வேடர் தலைவன், படகோட்டி
10. கும்பகர்ணன் - ராவணனின் தம்பி, எப்போதும் பெரும் தூக்கம் தூங்குபவன்.
11. கும்பன் - கும்பகர்ணனின் மகன்
12. குசத்வஜன் - ஜனகரின் தம்பி, மாண்டவி, சுருதகீர்த்தி ஆகியோரின் தந்தை. பரத சத்ருக்கனின் மாமனார்.
13. கவுசல்யா, கைகேயி, சுமித்திரை - தசரதரின் பட்டத்தரசியர்
14. சுநைனா - ஜனகரின் மனைவி, சீதையின் தாய்
15. கவுதமர் - அகல்யையின் கணவர், முனிவர்
16. சதானந்தர் - அகல்யை, கவுதமரின் மகன். சீதையின் திருமணத்திற்கு வந்த புரோகிதர்.
17. சம்பராசுரன் - இவனுக்கும், தேவர்களுக்கும் நடந்த போரில் தசரதர் தேவர்களுக்கு உதவினார்.
18. சபரி - மதங்க முனிவரின் மாணவ, ராமனை தரிசித்தவள்
19. சதபலி - வடக்கு திசையில் சீதையை தேடச்சென்றவன்.
20. சம்பாதி - கழுகரசன் ஜடாயுவின் அண்ணன், சீதையைக்காண அங்கதனின் படைக்கு உதவியவன்.
21. சீதா - ராமனின் மனைவி, ஜானகி, வைதேகி, ஜனகநந்தினி, ஜனககுமாரி, மைதிலி ஆகிய பெயர்களும் இவளுக்கு உண்டு.
22. சுமந்திரர் - தசரதரின் மந்திரி, தேரோட்டி
23. சுக்ரீவன் - கிஷ்கிந்தையின் மன்னன், வாலியின் தம்பி, சூரியபகவானின் அருளால் பிறந்தவன்.
24. சுஷேணன் - வாலியின் மாமனார், வானர மருத்துவன், மேற்கு திசையில் சீதையை தேடச்சென்றவன்.
25. சூர்ப்பணகை - ராவணனின் தங்கை, கணவனை இழந்தவள்.
26. தசரதர் - ராமனின் தந்தை
27. ததிமுகன் - சுக்ரீவனின் சித்தப்பா, மதுவனம் என்று பகுதியின் பாதுகாவலர
28. தாடகை - காட்டில் வசித்த அரக்கி, ராமனால் கொல்லப்பட்டவள்.
29. தாரை - வாலியின் மனைவி, அங்கதனின் தாய். அறிவில் சிறந்த வானர ராணி.
30. தான்யமாலினி - ராவணனின் இளைய மனைவி
31. திரிசடை - அரக்கிகளுள் நல்லவள், சீதைக்கு நம்பிக்கை ஊட்டியவள்.
32. திரிசிரஸ் - ராவணனின் தம்பியான கரனின் சேனாதிபதி.
33. நளன் - பொறியியல் அறிந்த வானர வீரன், விஸ்வகர்மாவின் மகன், கடலின் மீது இலங்கைக்கு பாலம் கட்டியவன்
34. 34. நாரதர் - பிரம்மாவின் மனத்தில் பிறந்தவர், கலக முனிவர்.
35. நிகும்பன் - கும்பகர்ணனின் மகன்
36. நீலன் - வானர வீரன் நளனின் நண்பன், வானர சேனாதிபதி, அக்னி தேவனின் அருளால் பிறந்தவன்

37. பரசுராமர் - விஷ்ணுவின் அவதாரம், ஜமத்கனியின் மகன்.

38. பரத்வாஜர் - பிராயாகை அருகே ஆசிரமம் அமைத்திருந்த முனிவர்

39. பரதன் - கைகேயியின் மகன், ராமனின் தம்பி.

40. மந்தரை - கைகேயியுடன் கேகய நாட்டிலிருந்து அயோத்திக்கு வந்த வேலைக்காரி, கூனி என்றும் சொல்வர்.

41. மதங்கர் - தவ முனிவர்

42. மண்டோதரி - தேவலோக சிற்பியான மயனின் மகள், ராவணனின் பட்டத்தரசி, இந்திரஜித்தின் தாய்.

43. மாரீசன், சுபாகு - தாடகையின் மகன்கள். ராமனால் வதம் செய்யப்பட்டவர்கள், மாரீசன் மாய மானாக வந்தவன்.

44. மால்யவான் - ராவணனின் தாய்வழிப்பாட்டன்.

45. மாதலி - இந்திரனின் தேரோட்டி

46. யுதாஜித் - கைகேயியின் தம்பி, பரதனின் தாய்மாமன்

47. ராவணன் - மிச்ரவா என்பரின் மகன், குபேரனின் தம்பி, புலஸ்திய முனிவரின் பேரன்.

48. ராமன் - ராமாயண கதாநாயகன்

49. ரிஷ்யசிருங்கர் - புத்திரகாமேஷ்டி செய்த முனிவர்.

50. ருமை - சுக்ரீவனின் மனைவி, வாலியால் கவரப்பட்டவள்.

51. லங்காதேவி - இலங்கையின் காவல் தெய்வம்

52. வசிஷ்டர் - தசரதனின் குலகுரு, அருந்ததியின் கணவர்.

53. மார்க்கண்டேயர், மவுத்கல்யர், வாமதேவர், காஷ்யபர், கார்த்தியாயனர், கவுதமர், ஜாபாலி - தசரதரின் மற்ற குருமார்கள்

54. வருணன் (சமுத்திரராஜன்) - கடலரசன், தன்மீது அணை கட்ட ராமனை அனுமதித்தவன்

55. வால்மீகி - ராமாயணத்தை எழுதியவர். ரத்னாகரன் என்பது இயற்பெயர், கொள்ளைக்காரனாக இருந்தவர், ராமனின் மகன் குசனுக்க ராமாயணம் போதித்தவர், சீதைக்கு அடைக்கலம் அளித்தவர்.

56. வாலி - இந்திரனின் அருளால் பிறந்த வானர வேந்தன்.

57. விஸ்வாமித்ரர் - ராமனுக்கு அஸ்திரவித்தை போதித்தவர், சீதா - ராமன் திருமணத்திற்கு காரணமானவர்.

58. விராதன் - தண்டகவனத்தில் வசித்த அரக்கன், ராமனால் சாபம் தீர்ந்தவன்.

59. விபீஷணன் - ராவணனின் தம்பி, ராமனிடம் அடைக்கலம் அடைந்தவன்.

60. வினதன் - கிழக்குத்திசையில் சீதையை தேடச் சென்றவன்.

61. ஜடாயு - கழுகரசன் சம்பாதியின் தம்பி, தசரதனின் தோழன், சீதைக்காக ராவணனுடன் போராடி உயிர்நீத்தவன்.

62. ஜனகர் - சீதை, ஊர்மிளாவின் தந்தை.

63. ஊர்மிளா - லட்சுமணனின் மனைவி.

64. ஜாம்பவான் - கரடி வேந்தர், பிரம்மாவின் அருள்பெற்று பிறந்தவர்

65. அனுமான் - அஞ்சனை, கேசரி ஆகியோருக்கு வாயுபகவானின் அருளால் பிறந்தவன், ஆஞ்சநேயன், மாருதி ஆகியவை வேறு பெயர்கள்.

66. ஸ்வயம்பிரபை - குகையில் வாழ்ந்த தபஸ்வினி, குரங்குப் படையினருக்கு உணவிட்டவள்.

67. மாண்டவி - பரதனின் மனைவி.

- சங்கரன்

FORM IV (See Rule 8)

PRESS & REGISTRATION OF BOOKS ACT

Registration of Newspapers (Central) Rules, 1957

Statement about Ownership and other particulars about Newspaper PENA KURAL

1. Place of publication	:	7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600078.
2. Periodicity of its publication	:	Monthly
3. Printer's Name	:	NV SIVASHANKAR
Nationality	:	Indian
Address	:	J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.
4. Publisher's Name	:	NV SIVASHANKAR
Nationality	:	Indian
Address	:	7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600078.
5. Editor's Name	:	RATHIKA S
Nationality	:	Indian
Address	:	3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam, OMR, Chennai - 600097.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding More than one per cent of the total capital	:	NV SIVASHANKAR 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600078.

I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 10.04.2024

(NV SIVASHANKAR)
Publisher

கோடை காலத்தில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்!

தமிழகம், தெலங்கானா, ஆந்திரம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் வெயில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. வெயிலின் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. கோடை வெப்பத்தால் சென்ற ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2,000-க்கும் அதிகம். இப்போதே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தால், உயிரிழப்புகளைப் பெருமளவு தடுக்க முடியும்.

வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும்போது உடலின் வெப்பம் சிலருக்கு 106 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் ஆகிய அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக உடலின் உப்புக்கள் வெளியேறிவிடுவதால், இந்தத் தளர்ச்சி ஏற்படுகிறது. இதற்கு ‘வெப்பத் தளர்ச்சி’ (Heat Exhaustion) என்று பெயர்.

நீண்ட நேரம் வெயிலில் நிற்பவர்கள், வேலை செய்பவர்கள், சாலையில் நடந்து செல்பவர்கள் திடீரென மயக்கம் அடைவதை அறிவீர்கள். இது ‘வெப்ப மயக்க’த்தின் (Heat Syncope) விளைவு. ‘சன் ஸ்ட்ரோக்’ என்று அழைப்பது இதைத்தான். வெயிலின் உக்கிரத்தினால் தோலிலுள்ள ரத்தக் குழாய்கள் அதீதமாக விரிவடைந்து இடுப்புக்குக் கீழ் ரத்தம் தேங்குவதற்கு வழிசெய்துவிடுகிறது; இதனால், இதயத்துக்கு ரத்தம் வருவது குறைந்துவிடுகிறது. ரத்த அழுத்தம் கீழிறங்குகிறது. மூளைக்குப் போதுமான ரத்தம் கிடைப்பதில்லை. உடனே, தலைச்சுற்றல், மயக்கம் உண்டாகிறது. சிலருக்கு மரணமும் ஏற்படுகிறது.

வெப்ப மயக்கம் ஏற்பட்டவரைக் குளிர்ச்சியான இடத்துக்கு மாற்றி, ஆடைகளைத் தளர்த்தி, காற்று உடல் முழுவதும் படும்படி செய்ய வேண்டும். அவரைச் சுற்றி கூட்டம் சேர்வதைத் தவிர்க்கவும். தண்ணீரில் நனைத்த துணியால் உடலைத் துடைக்கவும். மயக்கம் தெளிந்ததும் குளுக்கோஸ் தண்ணீர், பழச்சாறு அல்லது நீர்மோர் கொடுப்பது அவசியம். இது மட்டும் போதாது. அவருக்கு மருத்துவ உதவி கிடைப்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

புற ஊதாக் கதிர்களின் ஆபத்து

இந்தியா போன்ற வெப்ப மண்டல நாடுகளில் கோடை வெயிலில் வெளிப்படுகின்ற புற ஊதாக் கதிர்களால் ஏற்படுகிற உடல் பாதிப்புகள் அதிகம். இக்கதிர்களில் ‘ஏ’, ‘பி’ என்று இரு வகை உண்டு. ‘ஏ’ வகைக் கதிர்கள் இளங்காலையிலும் மாலைப்பொழுதிலும் வெளிப்படும். இவை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை தாக்கும் வெயிலில் ‘பி’ வகைக் கதிர்கள் வெளிப்படும். இவை ‘சன் ஸ்ட்ரோக்’ முதல் சருமப் புற்றுநோய் வரை உடலில் பலவித பாதிப்புகளை ஏற்படுத்தலாம். முக்கியமாக, சருமத்துக்குப் போதிய பாதுகாப்பு இல்லாமல் வெயிலில் அதிக நேரம் அலைகிறவர்களுக்குச் சருமம் கறுப்பாகிவிடுவதைக் கவனித்திருப்பீர்கள். இதற்குக் காரணம், சூரியக் கதிர்கள் அதிக வெப்பத்துடன் நேரடியாக சருமத்தைத் தாக்கும்போது, அதிலுள்ள ‘பி’ வகை புற ஊதாக் கதிர்கள் சருமத்தின் செல்களில் உள்ள டி.என்.ஏ.க்களை அழிக்கின்றன. அந்த அழிவை ஈடுகட்டுவதற்காகச் சருமத்துக்குக் கறுப்பு நிறம் தருகின்ற மெலனின் நிறமிகள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இதன் விளைவால், சருமம் கறுத்துவிடுகிறது.

அக்னி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது 42 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெயில் கொளுத்தும். அப்போது புற ஊதாக் கதிர்களின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல், சருமமும் அதைச் சார்ந்த ரத்தக் குழாய்களும் விரிந்து சிவந்துவிடும். அந்த வேளையில் 'CXCL5' எனும் புரதம் சருமத்தில் உற்பத்தியாகும். இது அருகிலுள்ள நரம்புகளைத் தூண்டும். இதன் விளைவால் சருமத்தில் எரிச்சல், வலி, வெப்பப் புண்கள் (Sun Burn) ஏற்படும்.

பலருக்கு சூரிய ஒளியே ஒவ்வாமையை உண்டாக்கும். வெயில் பட்டாலே உடலெங்கும் அரிக்கத் தொடங்கிவிடும். சருமம் சிவந்து வட்ட வட்டமாகத் தடிப்புகள் தோன்றும். அவற்றில் நீர் கோத்துக்கொள்ளும். இதைத் தொடர்ந்து சருமம் உரியும். இதற்கு 'சூரியஒளி நச்சு அரிப்பு' (Solar Urticaria) என்று பெயர். இவை தவிர, கோடையில் பொதுவாகத் தாக்கும் நோய்கள் வியர்க்குரு, வேனல் கட்டி, தேமல் தொற்று, அக்கி, அம்மை, வாந்தி, வயிற்றுப்போக்கு, நீர்க்கடுப்பு எனப் பட்டியல் நீளும்.

வெப்பம் குறைய உணவு முறைகள்

- கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும்.
- மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம்.
- ஐஸ் தண்ணீரைவிட, மண் பானைத் தண்ணீர் நல்லது.
- எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சர்க்கரை அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், கிரீம் மிகுந்த பேக்கரி பண்டங்கள், பர்கர், பீட்ஸா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது.
- அதேபோல், சூடான, காரமான, மசாலா கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர் சாதம், கம்பங்கூழ், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கேரட், பீட்ரூட், பீர்க்கங்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடலை, அவரை, முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெங்காயப் பச்சடி, தக்காளிக்கூட்டு முதலியவை சிறந்த கோடை உணவுகள்.

வெள்ளரி சாலட், தர்பூசணி ஜூஸ், தக்காளி சூப் வகைகளைச் சாப்பிடலாம். திராட்சை, சாத்துக்குடி ஆரஞ்சு, எலுமிச்சை, மாதுளை, முலாம் பழம், ஆப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் அருந்தலாம்.

பனை நுங்கு, கிர்ணி, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும்.

காபி, தேநீர் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதைக் குறைத்துக்கொண்டு, இளநீர், நீர்மோர், நன்னாரி சர்பத், பானகம், பதநீர் முதலியவற்றை அதிகமாகக் குடிக்கலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்பநிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

- கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. பகலில் வெளியில் செல்ல வேண்டியது அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக்கொள்ள வேண்டும். அல்லது குடை கொண்டு செல்ல வேண்டும்.
- கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்துகொள்ளலாம். சருமத்தில் 'சன் ஸ்கிரீன் லோஷ'னைப் பூசிக்கொள்ளலாம். கைவசம் சுத்தமான தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியது மிகமிக முக்கியம்.
- காற்றோட்டமான கதர், பருத்தி ஆடைகள் கோடைக் காலத்துக்கு ஏற்றவை. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம்.

ஒவ்வொரு வருடமும் அதிகரித்துவரும் வெயில் ஒரு சவால்தான். ஆனால், அதில் இருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்துகொண்டால், அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

- ராதிகா. S

நாணயத்தின் பரிணாம வளர்ச்சி!

பண்டைய காலத்தில் இந்தியா என்ற நாடோ பெயரோ இருந்தது இல்லை, இந்தியா என்ற பெயர் எப்படி வந்தது என்பதை பின்னர் காண்போம். மனித இனம் ஆங்காங்கே பிறந்தது சிறு சிறு கூட்டமாக வாழ்ந்திருக்கும் இந்த சிறிய கூட்டம் இனப்பெருக்கம் மற்றும் வளர்ச்சி கண்டு ஒரு தலைமையின் கீழ் வாழ்ந்து அந்த தலைமை ஜமீன்தார் & பண்ணையார் என்றே தோற்றம் கண்டு இவர்களின் தேடல்களாலும், நிகழ்ந்த சந்திப்புகளாலும் சண்டைகளாலும் சிறு மன்னன், அரசன், பேர் அரசன், என்று உரு கண்டு பலம் வாய்ந்த மன்னர்களின் பெயராலும், வளம் கொண்ட பொருளின் பெயராலும் சேரநாடு, சோழநாடு,மரகதநாடு, கொங்குநாடு, என்று நாடுகளாய்,தேசங்களாய், மாற்றங்கள் கண்டு இருக்கும் என்பதே உண்மையான கூற்று ஆகும்.

பண்டைய மனிதர்களின் தொழில் என்பது, அடிப்படை அத்யாவசிய தேவைகளான உணவு தேடலும், இயற்கை சீற்றங்கள், வனமிருகங்களிடம் இருந்து பாதுகாத்து கொள்வது என்ற இரு தேவைகள் மட்டுமே வேலையாக இருந்தது. இவர்களின் தேடலால். நிகழ்ந்த சந்திப்பில் பண்டமாற்று நடந்து, இந்த பண்டமாற்று முறையில் நடந்த குறைகளை நிவர்த்தி செய்ய, பொது மதிப்பு பொருள் ஒன்று தேவைப்பட்டது அப்போது உருவானதுதான். வெள்ளிக்காசு, பொற்காசு, செம்புக்காசு, பித்தளைக்காசு, போன்றது. இந்த காசுகளின் எண்ணிக்கையே “ஒரு காசு” ஆகும். ஒரு காசுக்கு எவ்வளவு மதிப்பு என்பதை அதிகாரம் கொண்டவர் உருவாக்கினார்கள்.

தொடர்ந்து வந்த மன்னர் காலங்களில் சங்ககால, ஆரவர்மன், சேரரர், சோழர், பாண்டியர் கால காசுகள் பல பல பெயர்களில் அழைக்கப்பட்டது. இந்த நடைமுறை ஆங்கிலேயர்கள் முகலாயர்கள் நுழைந்து ஆதிக்கத்தை நிலை நாட்டிய நேரத்தில்.

வெள்ளி காசு - ருப்ய ரூபா
தங்க காசு - சுவர்ண ரூபா
செப்பு காசு - தாமர ரூபா

ஈய காசு - சீச ரூபா என்று அழைக்கப்பட்டது. ருபியா என்றால் அழகான வடிவம் என்று பொருள்படும். சூர் பேரரசு நாற்பது செப்பு காசுகள் ஒரு ருபியாக மதிப்பு அளித்தனர்.

உதாரணமாக, புதுக்கோட்டை சமஸ்தானத்தின் தொண்டைமான் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் “அம்மன் காசு” வெளியிட்டார்கள். பின் வந்த பிரிட்டிஷ்

இந்தியாவில் ஒரு பைசாவுக்கு மூன்று அம்மன் காசுகள் நிர்ணயம் செய்து உள்ளனர்.

இதன் வளர்ச்சியே ஒரு அணா, ஓட்டையணா, போன்றது. இப்படி இருந்த நாணய மதிப்பு அன்னியர் வருகையால் ஆதிக்கத்தால், சிறிது காலத்தில் பணம் என்ற ரூபாய் மதிப்பு உருக்கியது.

இந்த பணமதிப்பு முதல் முதலாக இந்தியாவில்...

1. 1770ம் ஆண்டு ஹிந்துஸ்தான் என்ற தனியார் வங்கிதான் நம் நாட்டில் பணநோட்டுகளை வெளி-யிட்டது
2. 1835 முதல் 1957 வரை ஒரு பைசா - மூன்று தம்பிடிகள், ஒரு அணா - நான்கு பைசா, 64 பைசா - ஒரு ரூபாய், 16 அணா - ஒரு ரூபாய் என்ற மதிப்பு அளித்தனர்
3. 1861ம் ஆண்டு பேப்பர் நாணய சட்டத்தை அமல்படுத்தினர் ரூபாய் அச்சிட்டும் அதிகாரம் ஆங்கிலேயர்களுக்கு கிடைத்தது.
4. 01-04-1935ம் தேதி இந்திய ரிசர்வ் வங்கி உருவானது. 1938-ஜனவரி ஐந்து ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது. பிப்ரவரி-ஜூன் பத்து நூறு ஆயிரம் பத்தாயிரம் ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது.
5. 1917ம் ஆண்டு ஒரு ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது. 1926ல் தடை செய்யப்பட்டுள்ளது. 1940ல் மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது. 1943 மார்ச் மாதம் இரண்டு ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது.
6. 1947ல் தம்பிடி காசுகள் செல்லாதாக்கப்பட்டது.
7. 1950ம் ஆண்டு சுதந்திரத்திற்கு பிறகு ஒரு அணா, அரை அணா, கால் அணா வெளிவந்தது
8. 1957ல் இந்திய நாணய சட்டம் திருத்தப்பட்டது. தசம எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டது. ஒரு ரூபாய்க்கு நூறு பைசா என்று

9. 1957 முதல் 1964 வரை நாணயத்தை நயா பைசா என்று அழைக்கப்பட்டது.

10. 1964- ஜூன் - 1 நாள் நயா என்பதை கைவிடப்பட்டது, ஒரு பைசா என்று அழைக்கப்பட்டது.

11. 1861-08-06ல் இந்திய அரசின் சார்பாக முதலில் பத்து (10) ரூபாய் நோட்டுகள் வெளிவந்தது. இந்த நோட்டுகள் ஒரு பக்கம் மட்டுமே அச்சிட்டு வெளியிடப்பட்டது.

12. 1917ம் ஆண்டு முதல் முறையாக இருபக்கமும் அச்சிடப்பட்ட நோட்டுகள் வெளிவந்தது.

13. 1935ம் ஆண்டு முதல் ரூபாய் நோட்டுகள் வெளியிடும் முழு அதிகாரத்தையும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டது.

14. 1950ல் அசோகர் தூண் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வெளியானது.

15. 1957 லிருந்து 67ம் ஆண்டுகளுக்குள் 1,2,3,5,10, பைசா நாணயங்கள் வெளியானது.

16. இந்திய ஒரு நாணயத்தின் அலகு மூன்று பைசா 3/100

நாணய மதிப்பு கணக்கு முறை

இந்திய நாட்டின் நாணய மதிப்பு தசம எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டது. தசம எண்ணிக்கை முறையில் கணக்கிட எளிதாக இருக்கும் மற்ற நாட்டு நாணயத்துடன் மதிப்பிடும் போது குறைவாக இருக்கும். ஜனநாயக முறைப்படி ஒரு தேசத்தின் நாணய மதிப்பை எப்படி நிர்ணயம் செய்ய வேண்டும் தெரியுமா? நம் மூதாதையர்கள் பண்டமாற்று முறைப்படி பார்த்தால் ஒரு தனி மனிதனின் ஒருநாள் உடலால் உழைக்கும் உழைப்புக்கு அந்த மனிதனுக்கு மூன்று நாட்களுக்கு தேவையான உணவு அளிப்பது அல்லது மூன்று நாட்களுக்கு தேவையான உணவு உண்ண செலவாகும் தொகையே அந்த நாட்டின் நாணய மதிப்பு ஆகும்.

ஒரு தனி மனிதனின் ஒருநாள் உடலாலும் சிறு கருவிகளை பயன்படுத்தி உழைக்கும் உழைப்புக்கு அந்த மனிதனுக்கு ஆறு நாட்களுக்கு தேவையான உணவு உண்ண செலவாகும் தொகையே ஒரு நாணய மதிப்பின் மடங்காக இருக்கிறது இதை தசம எண்ணிக்கையில் கால் விகிதம் முதல் அரை, முக்கால், ஒன்று பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம், என்று மடங்காக அமையும்.

உதாரணமாக, ஒரு தேசத்தின் (இந்தியா) நாணயத்தின் பெயர் "இதியா" என்று சூட்டப்பட்டது. இதியா என்ற நாணயத்தின் மதிப்பு "அறுநூறு" ஆகும். அந்த தேசத்தின் ஒரு நாள் ஒரு மனிதனின் உடல் உழைப்பின் ஊதியம் அறுநூறு ஆகும்.

சிறு கருவிகளை பயன்படுத்தி உழைக்கும் உழைப்புக்கு ஒரு நாளைக்கு ஒன்றரை இதியா (900) ஆகும்.

அந்த தேசத்தின் நாணய மதிப்பின் அடிப்படை அறுநூறு ரூபாய், ஒரு இதியா ஆகும்.

ஒரு பைசா முதல் ஐந்நூறு தொண்ணூறு ஒன்பது ரூபாய் வரை சில்லறை வணிகத்திற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

ஐநூறு ரூபாய்க்கு மேல் உள்ள வணிகம் இதியா முறையில் நடைபெறும், நடைபெற வேண்டும். முழுமையான விதிமுறைகளை உருவாக்கிடவும் முடியும். உதாரணமாக சில சிறப்பு விதிமுறைகளையும், அதன் அம்சங்களையும் காண்க!

சிறப்பு விதிமுறைகள்

- புதிய இந்திய நாணயத்தின் பெயர் "இதியா"
- இந்திய நாணயம் இதியா வின் மதிப்பு"அறுநூறு ரூபாய்"
- இந்திய நாணயத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யும் அலகு
- ாதாரண தனி மனிதனின் ஒருநாள் உடலால் உழைக்கும் உழைப்பின் ஊதியம்.
- சாதாரண தனி மனிதனின் ஒருநாள் உடலால் உழைக்கும் உழைப்புக்கு ஊதியம் நிர்ணயம் செய்யும் அலகு
- சாதாரண தனி மனிதனின் ஒருநாள் உடலால் உழைக்கும் உழைப்புக்கு, மூன்று நாட்களுக்கு தேவையான உணவு உண்ண செலவாகும் தொகை ஒருநாள் ஊதியம்.
- சில்லறை வணிகம் ஐந்நூறு தொண்ணூறு ஒன்பது ரூபாய் உள்ளாகவே இருந்திடும்.
- சிறு வணிகமும்,பெரு வணிகமும் "இதியா" அடிப்படையில் நடைபெறும்.
- சில்லறை வணிகம் அறுநூறு ரூபாய் முதல் நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு ஒன்பது ரூபாய் வரை நேரடி இதியா பெற்றுக் கொண்டு விற்பனை செய்திடலாம்.
- பெரும் வணிக விற்பனை வங்கிகள் வழியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

நன்றி: https://www.facebook.com/therinthugollunkal

- சரவணன்

Subzero Cool Tech
AC REPAIR
SERVICE
& RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY
PREMIUM
SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097,
EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002
MOB.: 8754582123 / 9962245338

PENA KURAL, Tamil Monthly - April 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**